1006

1006

# ஜகன்மோகினி



ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள்.


| மலர் 11 | 1934 ஹ மார்ச் மீ | இதழ் 4 |
| --- | --- | --- |


விற்பனைக்குத் தயாராகி விட்டது.

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள்

எழுதிய

ஹாஸ்யக் கதைகள் நிறைந்த

## பக்ஷி மாலிகா

சித்திரப்படங்களுடன் கூடியது

விலை அணா ஆறு தான்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
23 MAY 1934
MADRAS

"ஜகன்மோகினி" ஆபிஸ்
...தரடித்தெரு திருவல்லிக்கேணி
சென்னை.

தனிப்பிரதி விலை அணா 2.

JL
ஈ211,N22JM
N34.11.4
182964

## கல்யாணம்! கல்யாணம்!!

"பொங்கலோ பொங்கல்" "பாலமணி கீரமணி" என்ற ஹாஸ்ய ரிகார்டினாலேயே "கொலம்பியா காமிக் பார்டி"யின் திறமை நன்கு விளங்கி விட்டது. அவர்களால் கொடுக்கப்பட்ட ஹாஸ்யக் களஞ்சியமான—அடங்கா நகைப்பையும், வியப்பையும் உண்டாக்கக் கூடிய—"மூட்டைக்கடி பொறுக்க மாட்டேன்" என்பது ஒரு புறமும், "கௌரீ கல்யாணமே வைபோகமே!" என்பது மற்றொரு புறமும் அடங்கிய அற்புதமான ரிகார்டு இப்போது வெளி வந்திருக்கிறது. GE. 269. விலை ரூ. 2-12-0.

மனிதர்களே ஆடு போலவும், எருமை போலவும் கத்தும் அருமையையும், கல்யாண வைபவத்தின் விநோதத்தையும் கேட்ட பிறகு உங்களால் நகைக்காமலிருக்க முடியுமா?......முடியவே முடியாது. கட்டாயம் குலுங்கக் குலுங்கச் சிரித்து ஆனந்த சாகரத்தில் மூழ்குவீர்களென்பதில் ஐயமில்லை.

இதைக் கேட்கும் ஒவ்வொருவரும் தமது வீட்டிலேயே கல்யாணம் நடப்பதாகவே சந்தோஷப்படுவார்கள்.

---

"ஜகன்மோகினி" ஆசிரியை

**ஸ்ரீமதி வை. மூ. கோதைநாயகி அம்மாள்**

**பாடிய பாடல்களை**

## நீங்கள் இன்னும் கேட்கவில்லையா?

**இன்றே கேட்டு ஆனந்தியுங்கள்.**

| | | |
|---|---|---|
| GE 197 | ஏழைமுகம் பாரய்யா - ஸிந்து பைரவி<br>போகுது பார் பணம் - நட பைரவி | விலை ரூ. 2-12-0 |
| GE 205 | சொல்லுவம் வைஷ்ணவன் - பியாக்<br>சத்யாக்ரகத்தியாகி - மாண்ட் | விலை ரூ. 2-12-0 |
| GE 222 | வெட்கமில்லையோ மனத்தில் - பியாக்<br>தாயே தந்தை யென்றும் - ராகமாலிகை | விலை ரூ. 2-12-0 |
| GE 236 | ஸந்தேகமு யாலரா 1. - கல்யாணி<br>" 2. - " | விலை ரூ. 2-12-0 |

## ஆர்வ்ஸ் கொலம்பியா ஹவுஸ்,

மதறாஸ்,

எல்லா "கொலம்பியா" ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்.



“ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்”
"His Master's Voice"
பாடகர் தான் மறைந்து யிருக்கிறார் போல் யிருக்கிறதே!
“ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்” கிராமபோன் மிகவும் சாஸ்த்ரீகமாக செய்யபட்டதில்லையோ?
இதன் விலை யென்ன? நானும் யிந்த மிஷினை வாங்க யோசிக்கிறேன்
JAFFER
எத்தனை இடங்களில் இம்மாதிரி பேச்சுகள் நடக்கின்றன இதன் உண்மை பரிசோதிக்க தங்கள் பக்கத்திலுள்ள
“ஹிஸ் மாஸ்டர்ஸ் … வியாபாரியிடம்
நேரில் கேட்டால் தெரியவரும்.

# பிரதாப விகடன்

---

## ஒரு மாதாந்திர ஹாஸ்யப் பத்திரிகை.

சிறு கதைகள், வேடிக்கை, விநோதம் நிறைந்த பல பக்கங்களுள்ளது. தனிப் பிரதி அணு இரண்டு. வருடச் சந்தா ரூபாய் ஒன்று. வெளி நாடுகளுக்கு இரட்டத்தனை. எல்லா பத்திரிகைகள் விற்போர்களிடமும், ஹிக்கின்பாதம்ஸ் சுதேசமித்திரன் ரயில்வே புத்தகசாலைகளிலும் கிடைக்கும். ஏஜெண்டுகளில்லாத இடங்களுக்கு ஏஜெண்டுகள் தேவை. விவரங்களுக்கு எழுதவும்.

"பிரதாப விகடன்" ஆபீஸ்
தபால் பெட்டி 23,
மதராஸ்.


---

## உங்களுக்கு எந்த நாவல் இனாமாக வேண்டும்?

கீழ்க்கண்ட விவரத்தைப் படித்து, உங்களது நேயர்களின் சந்தாவை அனுப்பும்போது, வேண்டிய புத்தகங்களின் பெயரைத் தெரிவியுங்கள். மறு தபாலில் தபாற்செலவின்றி அனுப்புகிறோம்.

| | | | | பரிசு புத்தகங்கள் |
|---|---|---|---|---|
| (1) | ஒரு புதிய சந்தாதாரரைச் சேர்த்து முன்பணமனுப்புகிறவர்களுக்கு | | | இன்ப மனோகரி |
| (2) | 2 புதிய சந்தாதாரர்களை | | ,, | நளினசேகரன் அல்லது மூன்று வைரங்கள் அல்லது வீரவஸந்தா |
| (3) | 3 | ,, | ,, | கோபாலரத்னம் |
| (4) | 4 | ,, | ,, | கதம்பமாலை அல்லது சுகந்தபுஷ்பம் |
| (5) | 5 | ,, | ,, | கௌரீமுகுந்தன் அல்லது ஸாரமதி |
| (6) | 6 | ,, | ,, | சண்பகவிஜயம் |
| (7) | 7 | ,, | | சாமளநாதன் அல்லது ருக்மிணீகாந்தன் அல்லது நவநீதகிருஷ்ணன் |
| (8) | 8 | ,, | ,, | வைதேகி அல்லது பத்மசுந்தரன் அல்லது ராதாமணி அல்லது சாருலோசனு அல்லது பரிமளகேசவன் & உத்தமசீலன் |

கீழ் குறித்த வடூவர் கே. துரைசாமி ஐயங்கார் நாவல்களையும் மற்றும் எமது இதர பிரசுரங்களையும் மிகவும் குறைந்த விலைக்கு தபாற் செலவு இன்றி 1934 பிப்ரவரி மாதம் முதல் தேதி முதல் ஏப்ரல் மாதம் 30-ந் தேதி வரையில் விற்கத் தீர்மானித்துள்ளோம். முக்கிய அறிவிப்பு: (1) கீழ்க்குறித்த தொகுதிகளைப் பிரித்துக் கொடுக்க முடியாது. (2) எத்தனை தொகுதிகள் தேவையோ அதன் முழுக்கிரயத்தையும் மணி ஆர்டர் மூலம் அனுப்பவேண்டும். சிலோன், சிங்கப்பூர் முதலிய வெளிநாட்டு நண்பர்கள், ஒவ்வொரு தொகுதிக்கும் அணா 8 சேர்த்து அனுப்பவேண்டும். வி. பி. யில் அனுப்பப்படமாட்டாது.

**தொகுதி—1.**

| | | |
|---|---|---|
| 1. திகம்பரசாமியார் பால்ய லீலை | 5 | 0 |
| 2. இராஜேந்திர மோகனா | 1 | 4 |
| | 6 | 4 |
| கமிஷன் | 2 | 12 |
| ஷை 2 நாவல்களின் விலை ரூ. | 3 | 8 |

**தொகுதி—2.**

| | | |
|---|---|---|
| 1. சதானந்த போதக சாமியார் | 2 | 4 |
| 2. ரமாமணி | 2 | 0 |
| | 4 | 4 |
| கமிஷன் | 1 | 12 |
| ஷை 2 நாவல்களின் விலை ரூ. | 2 | 8 |

**தொகுதி—3.**

| | | |
|---|---|---|
| 1. துரைக்கண்ணம்மாள் | 2 | 4 |
| 2. மிஸ்பில் லைலா மோகினி | 3 | 0 |
| | 5 | 4 |
| கமிஷன் | 2 | 4 |
| ஷை 2 நாவல்களின் விலை ரூ. | 3 | 0 |

**தொகுதி—4.**

| | | |
|---|---|---|
| 1. பன்னியூர் படாடோப சர்மா | 2 | 4 |
| 2. மன்மதபுரி மூடுமந்திரம் | 2 | 12 |
| | 5 | 0 |
| கமிஷன் | 2 | 0 |
| ஷை 2 நாவல்களின் விலை ரூ. | 3 | 0 |

**தொகுதி—5.**

| | | |
|---|---|---|
| 1. மன்மத விஜயம் | 0 | 4 |
| 2. சண்முக வடிவு | 0 | 4 |
| 3. சந்திர மீனன் | 2 | 0 |
| | 2 | 8 |
| கமிஷன் | 1 | 0 |
| ஷை 3 நாவல்களின் விலை ரூ. | 1 | 8 |

**தொகுதி—6.**

| | | |
|---|---|---|
| 1. தில்லை நாயகி | 2 | 4 |
| 2. சரோஜனி | 2 | 0 |
| 3. வீரகேசரி | 1 | 12 |
| | 6 | 0 |
| கமிஷன் | 2 | 0 |
| ஷை 3 நாவல்களின் விலை ரூ. | 4 | 0 |

**சங்கீதத் தொகுதி—1.**

| | | |
|---|---|---|
| 1. ஸங்கீத சிந்தாமணி | 3 | 0 |
| 2. திராவிடகானம் | 3 | 0 |
| 3. ஸங்கீத சில்வரைக் கோர்வை | 3 | 0 |
| 4. கீர்த்தன ரத்னங்கள் | 1 | 4 |
| | 10 | 4 |
| கமிஷன் | 4 | 4 |
| ஷை 4 சங்கீத புத்தகங்களும் | 6 | 0 |

# எம். எஸ். ராமுலு கம்பெனி,

எஸ்பிளனேட்,
மதராஸ்.

## பக்ஷ மாலிகா

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதிய, அடங்கா நகைப்பைத் தரும் அனேக ஹாஸ்யக் கதைகள் நிறைந்த பக்ஷ மாலிகா உங்களைப் பக்ஷத்துடன் தேடிக்கொண்டு வந்துவிட்டது.

கண்ணைக் கவரும் சுமார் 15 சித்திரப் படங்களுடன் கூடியது.

**விலை அணா ஆறேதான்**

## ஜெயஸஞ்ஜீவியை

நீங்கள் படித்தீர்களா? இல்லையாயின் உடனே நான்கணா ஸ்டாம்பு அனுப்புங்கள்.

### செய்கோன் சந்தா நேயர்களுக்கு

ஸ்ரீமான் சொ. ராமநாதன் தற்போது இந்தியாவுக்குத் திரும்பி வந்திருப்பதால், செய்கோனிலும், அதைச் சேர்ந்த இதர நாடுகளிலுமுள்ள நமது அன்பர்கள் தங்களது சந்தாவையும், தங்களது நேயர்களின் சந்தாவையும் கீழ்க்கண்ட நமது நண்பரிடம் கொடுத்து ரசீது பெற்றுக் கொள்ளும்படிக் கோருகிறோம்.

Mr. C. Nagayya,
No. 114. Rue Pellerin
SAIGON.

### செட்டி நாட்டினருக்கு

செட்டி நாட்டில் நமது பத்திரிகைக்குச் சந்தாதாரராகச் சேரும் அன்பர்களெல்லாம் "ஸ்ரீமான் சொ. இராமநாதன், ஷண்முகநாதபுரம்" என்பவரிடம் பணம் கொடுத்து ரசீது பெற்றுக் கொள்ளவும்.

### சந்தா நேயர்கள் கவனிக்கவும்

இரண்டாவது சஞ்சிகையில் குறைந்த பக்கங்களை இதுவரையில் சேர்த்து வெளியிடவில்லையே யென்று நேயர்கள் கவலைப் பட வேண்டாம். இக்கதை முடிவதற்குள் சேர்த்து வெளியிடுகிறோம்.

1934-11-4
182964

## 7-வது அதிகாரம்

### புதிய தலைவர்—அதிசயக் களவு

தக்க பருவம் என்பது தானாக — இயற்கையாக—ஒவ்வொன்றையும் தாங்கி நிற்பது ஈசனின் மாயைகளில் ஒன்றானது. சகல காரியங்களிலும் இயற்கை தேவதை தன்னரசு புரிந்து செங்கோல் செலுத்துவாள். தாவரம் முதல் மனித வர்க்கம் வரையில் இயற்கைப் பருவ காலம் வந்து சூழுவது சகஜமல்லவா! எங்கெந்த காலத்தில் எதெது நடக்க வேண்டுமோ அப்படியே விதை முதலில் சிறு முளையாயும், பிறகு செடியாயும், பூவாயும், காயாயும், கனியாயும் கொடுக்கின்றது. அதேபோன்று சிறிய குழந்தைப் பருவமாயும், பிறகு நீந்தல், தவிழ்தல், நடத்தல், பேசல், ஓடல், முதலிய படிப்படியாக வருவது இயற்கையன்னையின் திருவிளையாடலன்றோ!

அதேபோன்று நமது இன்பமணியை இயற்கையன்னை முற்றிலும் கடாக்ஷித்துப் பருவத்திற்கேற்ற அபாரமான எழிலையும் புதிய தேஜஸையும் கவர்ச்சித் தன்மையையும் பரிபூர்ணமாக அளித்திருந்தாளாதலால் இன்பமணி வெகு மனோகரமாய், அழகே உருக்கொண்ட தருணியாய் விளங்கினாள். வயதிற்கும் பருவத்திற்கும் ஏற்ற தேக வளர்ச்சியைப் போல அறிவு வளர்ச்சியும் பூர்ணமாகப் பெற்றிருந்தாள். இவளுக்கு வீணை, பிடில் இரண்டு வாத்தியங்களும் தெரிவதோடு அருமையாக வாய்ப் பாட்டும் பாட நன்கு கற்றிருந்தாள். சங்கீதமும் தினே தினே பெருகிக்கொண்டே வந்தது.

---

ஒரு முக்கியமான காரியத்தைச் செய்ய வேண்டிய தினத்தில் சற்று தள்ளி வைத்துக் கொள்ளக் கூடிய மற்ற காரியங்களைச் செய்யாதிருத்தலே நலம். அவற்றில் ஏதாவது ஒன்றில் சற்று தாமத மேற்பட்டுவிடின் முதற் காரியம் குட்டிச் சுவராகி விடுகின்றது.

உத்தமருடைய படாடோபமற்ற எளிய வாழ்க்கையைக் கண்டு வியப்புறுதார் பாக்கி இல்லை. அவர் அனேக தர்ம ஸ்தாபனங்களை ஏற்படுத்தி அதற்கு நிர்வாகக் கமிட்டிகளும் வேலைக்காரர்களும் வேண்டியமட்டும் அமர்த்திவிட்டார். வேலை கிடைக்காத இக்காலத்தில் B.A. B.L., M.A. M.L., முதல் பட்டதாரிகளெல்லாம் மனு போட்டு இவருடைய தர்ம ஸ்தாபனங்களாகிய பாடசாலைகள், கலாசாலைகள், கைத்தொழில் சாலைகள் வைத்திய சாலைகள், குழந்தைகளுக்குப் பால் கொடுக்கும் சாலைகள், திக்கற்ற ஏழைக் குழந்தைகளை ஆதரிக்கும் அனுதை ஆசிரமங்கள், தாய்தந்தையர் இருந்தும் பணமின்மையினுல் கஷ்டப்படும் மக்களுக்கு பண உதவி செய்து விவாகம் செய்யும் சங்கங்கள், சங்கீத சாலைகள் முதலிய பல வகை ஸ்தாபனங்களில் வேலைக்கு அமர்ந்தார்கள்.

வாரம் ஒரு முறை ஒவ்வொரு ஸ்தாபனத்திற்கும் உத்தமரும் ரங்கமணியம்மாளும், இன்பமணியும் சென்று கவனித்துக்கொண்டு வருவார்கள். அனுதை யாச்ரமத்திற்கு மட்டும் அனேகமாக தினந்தோறும் இன்பமணியும் ரங்கமணியும் சென்று அங்குள்ள பணியாள்கள் சரிவர நடத்துகிறுர்களா! குழந்தைகளைக் கவனித்துச் செய்கிறுர்களா என்று கவனித்து வருவார்கள். இன்பமணிக்கு இவ் வேலை செய்வதில் பிரியம் ஜாஸ்தி. அந்த ஆசிரமத்திலுள்ள குழந்தைகளும் பெரிய பெண்களும் அங்கு நடக்கும் மாதிரியைக் காணும்போ தெல்லாம் "ஆகா! நாமும் இவ்விதம் ஓர் ஏழை அனுதையாக விருக்கவேண்டியவள்தானே. நமக்கு மட்டும் இவ்வித பதவி ஈசனளித்துவிட்டதேன்? மற்ற ஏழைகள் இவ்விதமே இருப்பதேன்?" என்று சிந்திப்பாள். தனது ஆதிகாலத்தின் நினைவை சற்றும் மறக்கவில்லை யாதலால் அந்த ஏழ்மை நிலைமையைக் கண்டால் அவ

---

தங்களுடைய கட்டுரையை எப்படியாவது படிக்கச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் சில கற்றுக்குட்டி உரையாளர்கள் சற்று பிராபல்யமானவர்களின் பெயரையே கதையின் பெயராக வைத்துக் கட்டுரை எழுதுகிறுர்கள். இந்த சின்ன காரியத்தில் வெற்றி பெற நினைப்பது போக அந்த கட்டுரையைப் படித்தோர் ஆசிரியரின் போக்கை எண்ணிப் பரிகஸிக்கின்றுர்கள்.

ளுக்கு ஒரு விதமான உணர்ச்சி யுண்டாகும். அக் குழந்தைகளோடு விளையாடுவது பெரிய இன்பமாகத் தோன்றும்.

"இன்பமணி வீட்டை விட்டு வெளியில் வருவாளா!" என்று காத்திருக்கும் ஜனங்களின் எண்ணிக்கை கூறத் திறமன்று. உத்தமரின் எதிரிகளில் சிலர் ஒரு கூட்டங்கூடிப் பேசித் தமக்குள் ஒரு முடிவு செய்துகொண்டார்கள். அதாவது "நம்மில் ஒருவருக்கு இன்பமணியைக் கொடுத்து விவாகம் செய்துவைக்கும்படியான வழியைச் செய்வோம். இல்லையேல் ஒரு கை பார்த்துவிடுவது'' என்ற முடிவாயிற்று. எனினும் அந்த தீர்மானத்தில் "எனக்கு இன்பமணி. எனக்குத்தான் இன்பமணி.'' என்கிற போட்டி ஏற்பட்டு அவர்களுக்குள்ளேயே பெரிய வழக்கு வந்துவிட்டது. உத்தமர் யாருக்குக் கொடுக்க இணங்குகிருரோ அவனுக்குத்தான் இன்பமணி. இதுதான் கடைசியாக முடிவடைந்த தீர்மானம். இதிலிருந்து பிசகக் கூடாது.'' என்று ஓர் கட்டுப்பாட்டிற்கு வந்தார்கள்.

அதுமுதல் "உத்தமரை எந்த விதமாக சரிப்படுத்தி நாம் இன்பமணியை அடையலாம்?'' என்கிற போட்டி ஒவ்வொருவருடைய மனத்திலும் தீவிரமாக உதித்துவிட்டது. அவ்வகையில் வேலை செய்யத் தொடங்கினர்கள். இந்த சூழ்ச்சிகள் உத்தமருக்குத் தெரியாதாகையினல் அவர் தன் வேலையில் கண்ணுக விருந்துவிட்டார்.

அனுதை யாச்ரமத்தின் மானேஜராக நியமிக்கப்பட்டுள்ள வாஸுதேவன் என்கிற இளைஞன் M.A., பரீக்ஷை பாஸ் செய்தவன். அவன் நல்ல குணமும், உயர்ந்த நோக்கங்களும், பரந்த அறிவும், சூக்ஷ்ம புத்தியும், பெரியோரென்கிற பக்தி விசுவாஸமும் உள்ளவன். இந்த ஏழைகளுக்காக உள்ள அனுதை யாச்ரமம் முன்பு ஏற்கெனவே ஒரு பெரிய தனிகரான செட்டியாரால் நடத்தப்பட்டு வந்தது. கப்பல் வியாபாரத்தில் அச் செட்டியாருக்கு திடீரென்று நேர்ந்த நஷ்டத்தினல் அவர் பாபராகிவிட்டார். அந்த செட்டியாரின்

---

சொந்தமாக பெயர்களை அமைத்து நூல் வரைவது ஆசிரியர்களுக்கு அழகே யன்றி பிறர் வைத்துள்ள பெயரையே வைத்துக் கதை எழுதுவது மிகவும் கேவலமன்ரே? இதனல் என்ன கவுரவம் உண்டாகி விடும்?

குடும்பமே நடப்பது கஷ்டமாகிவிட்டது. ஆதலால் இவ்வாச்ர மத்தை என்ன செய்வது? எப்படி நடத்துவது?'' என்று மிக்க வருத் தப்பட்டு தம் கையிலுள்ள பொருள்களை எல்லாம் விற்று சில தினங்கள் நடத்தினர்; அதன் மேலும் அது முடியாது போய்விட்ட தால் பத்திரிகையில் விளம்பரம் செய்தார்.

அதைக் கண்ணுற்ற உத்தமர் உடனே அந்த ஆச்ரமத்தைத் தாம் ஒரு மதிப்பான விலையைக் கொடுத்து வாங்கிக் கொண்டார். ஒரு சொந்தக்காரர் மாறி மற்றொருவர் சொந்தமாக ஏற்பட்டுவிட்ட தும் அதிலிருந்த வேலைக்காரர்களுக் கெல்லாம் பயமும், ஒருவித மான நடுக்கமும் உண்டாகிவிட்டன. அதிலும் நமது வாஸுதேவ னுக்கு அதிகமான கவலை யுண்டாகி விட்டது. ஏனெனில் ஆதியில் அவன் பட்ட சிரமமும் எத்தனையோ நாட்கள் பட்டினியினுல் அவஸ்தையுற்ற துன்பமும் அவனுல் இத்தனை எளிதில் மறக்க முடியுமா!

வாஸுதேவனின் பெற்றோர் மிகவும் ஏழைகள். அவனுடைய தந்தை ஓர் மில்லில் வேலையாக விருந்து மாதம் 15 ரூபாய் சம்பளங் கொண்டுவருவார். அதை யப்படியே முற்றிலும் வீட்டிற்குக் கொடுக்கமாட்டார். தனக்கு இஷ்டமிருந்தால் பத்து ரூபாய் மனைவி யிடம் கொடுப்பார்; இல்லையேல் 5 ரூபாய்தான் கொடுப்பார். மிகுதி யுள்ளதைக் கூசாமல் துர்வினியோகம் செய்துவிடுவார்.

வாஸுதேவன் ஒரே மகன்தான். அவனுக்கு ஏழு வயதாகி யும் படிப்புக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யச் சக்தி இல்லை. அவ னுடைய தாயாராகிய காமாக்ஷியம்மாளுக்குத் தன் மகனை நன்ருகப் படிக்கவைத்து மனமகிழ ஆசை. அவள் புருஷனை குமாரசாமிக்கு அதில் விருப்பமில்லை. ஓர் அச்சாபீஸில் இரண்டு ரூபாய் சம்பளத் திற்கு விட்டுவிடவேண்டுமென்று விருப்பம். தாயாருக்கு அது நேர்

கதை எழுதுவதன் கருத்து தன் சொந்த கற்பனு சக்தியையும், அனு பவ ஞானத்தையும், யூகத்தால் நேரில் அறியும் விஷயங்களையும் அழகு படச் செய்வதே யாகும். அதை விட்டு ஒரு புத்தகத்தில் வந்த விஷ யத்தை அப்படியே திருடி எடுத்து எழுதிவிட்டுத் தான் எழுதியதாகப்

விரோதமாகப்பட்டது. ஆதலால் தினம் இது விஷயத்தில் சண்டை மண்டையுடையும்.

"என் குழந்தையை நான் அக்ஷரம் இன்னதென்று தெரிவிக்காமல் அச்சாபீஸிலும், சோடாக் கடையிலும், பெப்பர் கடையிலும் நான் விடமாட்டேன். நான் நாலு வீடு பிச்சை எடுத்தாவது என் குழந்தைக்குப் படிப்பு சொல்லிக்கொடுக்கத்தான் போகிறேன். உங்களைப்போல அக்ஷரம் நிரக்ஷரமாக—மூடமாக—விருந்து துணி ஷாப்பில் மூட்டை தூக்கவேண்டாம். எப்படி படிக்க வைக்கப் போகிறாய் என்று என்னைக் கேட்கவேண்டாம்.'' என்று கண்டிப்பாய்க் கூறிவிட்டாள். வாஸுவும் அதற்கே ஆசைப்பட்டுத் தன் தாயின் பக்கமே சாய்ந்தான்.

இதற்குமேல் குமாரசாமி என்ன செய்வான்? கோபமும் ஆத்திரமும் பொங்க மனைவியைத் திட்டினான். அதே கோபத்தினால் மேற்கூறியபடி பணத்தைக் கொடுக்காமல் அழவைக்கத் தொடங்கினான். மனைவியுடனும் மகனுடனும் பேசுவதையே நிறுத்தினான். வீட்டில் தினம் சித்திரவதைதான்.

காமாக்ஷியம்மாள் மூட புருஷனின் மதியைத் திருப்பச் செய்த பிரயத்தனமெல்லாம் வீணாகிவிட்டதால் அதற்குமேல் வீண் வார்த்தைக்கு—வழக்கிற்குச்—செல்லாது தான் கோரிய சபதத்தை எங்ஙனம் நிறைவேற்றுவது என்பதையே கண்ணாகக் கவனித்து வந்தாள்; சதா அதே கவலை கொண்டாள்.

அழகேசருக்கும் அவர் மனைவிக்கும் சதா லடாபுடா சண்டைதான். ஏனெனில் அந்தம்மாளுடைய வயிறும் கையும் சதா வேலை செய்துகொண்டே இருக்கும். கையில் ஆறு மாதக்குழந்தை என்றால் வயிற்றில் நான்குமாதக் கருப்பம் நிச்சயம். அம்ருதவல்லி என்கிற அந்தஅம்மாள் 14 வயதில் இவர்கள் வீட்டிற்கு வந்ததுமுதல் இதே நிலைமையான உத்யோகத்

---

பிறர் பார்க்கச் செய்து விட்டால் முதல் நூலைப் படித்தவர்கள் இதைப் படித்ததும் இதற்கு எவ்வளவு மதிப்பு கொடுப்பார்கள்? "இஅந்த விஷயத்தை நான் சில வருடங்களுக்கு முன்பே......இன்னாரால் இயற்றப்பட்ட இந்த புத்தகத்தில் படித்திருக்கிறேன். இதென்ன அதிசயம்!

தைத் தவிர வேறு கிடையாது. சுமப்பதே அந்த அம்மாளின் தலை விதிபோலும்.

ஒரு நிமிஷங் கூட நிம்மதி என்பதே இல்லாமல் கர்ப்பத்தினல் உண்டாகும் கஷ்டங்களைச் சகித்து குழந்தையை ஈன்றெடுத்து, மறு பிறவிபோலப் பிழைத்தாள். அது முதல் குழந்தை வளர்க்கும் போராட்டத்தில் இரவு பகல் தூக்க மின்றி அதோடு இம்சை பட்டுக் கொண்டிருக்கும் அத்யாயம் முடிவதற்குள் பழய குருடி கதவைத் திறவடீ! என்றதுபோல மேல்படி வயிற்றுச் சாமியார் வந்து விடுவார். இப்படியே ஒரு பெண்பிள்ளை வதை பட்டால் அந்த பெண்ணிற்குத்தான் என்ன சுகம்! நிம்மதி ஏது? தேகத்தில் வலிவேது? மனத்தில் சந்துஷ்டி ஏது? குடும்பத்தில் ஒற்றுமை ஏது?

அவளிடம் பிறக்குங் குழந்தைகளுக்கு வலிவும் புஷ்டியும் எப்படி உண்டாகும். தாய்ப்பா லென்பது அவைகளுக்குக் கனவிலும் காண முடியாது. போட்டுப் பாலில் வளரும் குழந்தைகளை தாயாருக்கு மீண்டும் வயிற்று பாதை இல்லாவிடில் சற்று கவனிக்க முடியும். அவளையே எழுந்திருக்க விடாது சோறு தண்ணீர் இன்றி ஆளைக் கீழே தள்ளும்போது அவளுக்கு வீட்டி லுழைக்கவும் கணவனையும் குழந்தைகளையும் கவனிக்கவும் அக்கரை யுண்டாகுமா, அகங்காரமும், எரிச்சலும், தள்ளாமையும் உண்டாகுமா?

அத்தகைய நிலைமையில் சதா சிடு சிடுத்த முகத்தைத் தவிர சந்தோஷ முகங் கிடையாது. குழந்தைகளின் கண்ராவியோ சொல்ல முடியாது. இவளுக்குண்டாகும் பலஹீன நிலைமையில் ஏதோ போட்டுப் பாலேயோ, கஞ்சி, களி முதலியவற்றையோ போட்டுத் தொலைப்பதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்? அவ்வாறுள்ள குழந்தைகள் கையும் காலும் சூம்பிப் போய் சந்திப் பிள்ளையார் போலச் சூணு வயிறும், ஒழுக்கு மூக்கும், பருத்த மண்

இந்த கட்டுரையாளருடைய எல்லாக் கட்டுரைகளும் இப்படித்தான் பிறர் பொருளோ என்னவோ?''......என்கிறார்கள். இந்த லாபந்தான் கிடைக்கும். சொந்த சரக்கில்லை எனில் கட்டுரை எதற்கு? இது நகைப்புக் கிடமன்றோ?

டையும், பார்ப்பவர்கள் பயமுற்று ஓடும்படியான நிலைமையில் நடக்க மாட்டாமல் சப்பாணிபோல உட்கார்ந்து கிடக்கும்.

அத்தகைய குழந்தைகளுக்குத்தான் அகோர பசி. எதைக் கண்டாலும் தின்றுவிட வேண்டுமென்ற பர பரப்பு. கண்ட குப்பையையும் மண்ணையும் வாரித் தின்று வயிற்றில் கட்டியும் மாந்தமும் இன்னும் பல்வேறு ரோகமும் உண்டாகி சதா நய்யாங் நய்யாங் என்று அழுது கொண்டே தாயாரின் பிராணனை வாங்கும். அவள் என்ன செய்வாள். ஆத்திரத்தில் தடார் புடார் என்று அடித்துக் கிள்ளி இம்சித்து சலித்துக் கொண்டு அழுவாள்.

"குழந்தைகளை ஏண்டீ அடிக்கிறாய்?" என்று மூட கணவன் சண்டைக்கு வருவான். அவனுக்கும் பஞ்சாதியோடு சில திட்டுகள் வெகுமானமாவதைப் பெற்றுக் கொண்டு போவான். அவனுக்கு வருவாயும் குறைவு. பள்ளிக்கூட வாத்தியாருக்கு அதிலும் சின்ன வகுப்பு வாத்தியாருக்கு என்ன கிடைக்கும்?

விதியின் தலைமீதும், கடவுளின் தலைமீதும் பாரத்தைச் சுமத்தி விட்டுத் தமது மிருகத்தன்மையினாலும் மதியீனத்தினாலும் மனக் கட்டுப்பாடு அற்ற மவுட்டீகத்தினாலும் மேற்குறித்த கொடிய பயங்கர மான தொல்லைகளுக்குத் தாமே ஆளாகி விடுகிற குடும்பங்கள் நாகரிக மும் அறிவும் முதிர்ந்ததாகச் சொல்லும் இக் காலத்திலும் விருத்தி யடைந்து விடுகின்றன.

சதா வீட்டில் தொல்லை. இத்தகைய குழந்தைகளுக்குத்தான் பிடிவாதமும், சண்டித்தனமும் அதிகமாகி விடுகின்றன. ரோகத்தி லும் இடி பட்டுத் தாயாரின் த்ருடமும் குறைந்து சலிப்பு ஏற்பட்ட நிலைமையில் குழந்தைகளின் வியாதியே குழந்தைகளைக் கொண்டு போய் விடுகின்றன. என்ன செய்வது?

---

*கட்டுரை எழுதுவதிலும் கதைகள் எழுதுவதிலும் விரைவில் முன் னுக்கு வரவேண்டுமானால் தன் சொந்த சரக்குகள் ஊற்றுபோல ஓடினால் தான் முன்னுக்கு வர முடியும். பிறருடைய பொருளைத் திரட்டித் தன்னு டைய தென்று வரைந்தால் அந்த ஆசிரியத்வம் எத்தனை நாளைக்கு நிலைக்கும்?*

அம்ருதவல்லி சுகுமாரமான பெண்மணி. இப்போதுதான் வயது 30 ஆகிறது. இதற்குள் அவளுக்கு 5 பெண் குழந்தைகளும் 6 ஆண் குழந்தைகளும் முழுசாகப் பிறந்து விட்டன. அவற்றில் இறந்ததுபோக மிச்சம் 9 குழந்தைகள் இருக்கின்றன. 4, 5 மாதங்களில் சேதமாகப் போய்விட்டது சுமார் ஏழு, எட்டுக்குக் குறைவில்லை.

இளந்தளிருக்கு ஒப்பான மெல்லிய தேகத்தையும், சுகுமாரமான இருதயத்தையும் படைத்த அம்ருதவல்லிக்கு மேற்குறித்த பயங்கர சம்பவங்களால் தேக நிலையும் மனோ நிலைமையும் எப்படி இருக்கும்? நாளுக்கு நாள் அடியோடு வலிமையே குன்றிப்போய் தேகத்தில் நல்ல ரத்தமே இல்லாமல் பாசையைப்போல உடம்பு வெளுத்து துரும்புபோலாய் விட்டாள். அவளைப் பார்ப்போர் திடுக்கிட்டு "ஐயோ! இதென்னடீ அனியாயம்! உடம்பு வீக்கமெடுத்து விடும்போல விருக்கிறதே! இதற்குத்தான் முன் காலத்தில் பெரியோர் தம் மக்களைப் பிறந்தகத்திற்கு அழைத்துச் செல்வது; உறவினர் வீட்டிற்கு அழைத்துச் செல்வது என்ற முறைகளை உபயோகித்து வந்தார்கள். அப்படிப் போயிருக்கும் நாளிலாவது கொஞ்சம் ஓய்வு ஏற்படும். இத்தனை குழந்தைகள் பிறக்கவும் ஏதுவிருக்காது. இக் காலத்தில்தான் அதுவெல்லாம் குறைந்து கொண்டே வருகின்றன. அதிலும் தாயாரும் கிடையாது. தகப்பனுவது கொஞ்சம் கவனிக்கக் கூடாதா?" என்று கூறுவார்கள்.

அம்ருதவல்லியின் நிலைமைக்கு யார் என்ன செய்ய முடியும்? சீக்கிரத்தில் க்ஷய ரோகம் வந்து விடும்போல விருக்கிறது என்று வைத்தியரும் கூறி விட்டார். அடியோடு சக்தி ஒடுங்கிய சமயத்திலும் வயிற்றில் 7 மாத மாகிவிட்டது. இது எத்தனுவது கர்ப்பமோ கணக்கு அவளுக்கே மறந்திருக்கும். இன்னிலைமையில் அவள் புரு

---

முன்பின்னறியா திருப்பினும் சிலர் வெகு நாட் பழக்கமும், மிகுந்த அக்கரையு முள்ளவர்கள் போலப் பேச ஆரம்பித்து யோக க்ஷேமங்களை விசாரிக்கிருர்கள். சம்பாஷணை முடிவில் அவர்கள் இன்னுர் என்று தெரிந்த பிறகுதான் அவர்களுடைய உண்மையான யோக்யதையை யறிய முடிகின்றது.

ஷனே வெந்ததும் வேகாததுமான சமையலை முணு முணுத்துக் கொண்டே செய்து,குழந்தைகளுக்கு வயிறு நிதானம் தெரியாமல்—ஆண்பிள்ளைகளின் வேலை தெரியாதா—தடார், புடார் என்று ஆடிக் கொண்டே போட்டு விட்டு ஓடுவான்.

குழந்தைகளுக்கு இதனால் அஜீரணம் ஏற்பட்டு வயிற்றுப் போக்கு உண்டாகி விட்டது. இத்தனை இம்சையில் ஒத்தாசைக்கு மனிதர்கள் கிடையாது. "ஐயோ! நான் சீக்கிரம் சாக மாட்டேனா! இந்த பிரசவத்துடன் நான் கயாதான்; தெரிந்து விட்டது. அது வரையில் யார் பாதை படுவது ஈசா!'' என்று தவிப்பாள். முற முறப்பும் சுத்தமும் இல்லாததால் ஈயும் எறும்பும் கொசுவும் சிறு சிறு விஷக் கிருமிகளும் வீட்டில் ஏராளமாக உண்டாகி விட்டன. தம்பதிகளின் சண்டையும் குழந்தைகளின் ரோதனையும் கூற முடியாது. யுத்த களந்தான் வீடு.

இத்தகைய நிலைமையிலிருக்கையில்தான் இவர்கள் வீட்டிற்குப் பக்கத்து வீட்டில் காமாக்ஷியம்மாள் குடி வந்தாள்: அந்த அம்மாள் அடுத்த வீட்டு அமளியை அருகிலிருந்தபடியே இரண்டொரு நாள் கவனித்ததிலிருந்து அவர்களின் நிலைமையை நன்கு தெரிந்து கொண்டாள். கடவுள் தனக்கு நற்காலம் பிறக்கச் செய்து விட்டார் என்கிற சந்தோஷம் உண்டாகி விட்டது. உடனே தன் சபதம் பலித்து விடும் என்ற நம்பிக்கையும் அவள் மனத்தில் தோன்றி விட்டது.

அண்டை அயல் வீடுகளுக்கு ஏதேனும் ஒரு முகாந்திரத்தை வைத்துக் கொண்டு சில பெண் பிள்ளைகள் செல்வது சகஜமல்லவா!'' "எங்க வீட்டு குழந்தை இங்கு வந்ததாம்மா!...கொஞ்சம் சாணி இருக்குமா—நீங்கள் கட்டி யிருக்கும் புடவை என்ன விலை? வெகு நன்றாக இருக்கிறது; எந்த கடையில் வாங்கினீர்கள்?...இந்த

---

" இந்த ஊரிலிருந்தும் என்னைத் தெரியா தென்பது ஆச்சரியமாயிருக்கிறதே!'' என்கிறார்கள் சிலர். அவர்கள் மனத்தில் தங்களைப் போன்ற பிராபல்யமானவர்கள் வேறு யாருமே கிடையாது என்கிற எண்ணம் போலும்.

சங்கிலியைச் சற்று மாதிரி காட்டுகிறீர்களா!...(சங்கிலி இவர்கள் செய்வது என்னவோ கனவில்தான்.) உங்க வீட்டில் குடித்தனத்திற்கு இடமிருக்குமா? எங்க அம்மாஞ்சி மன்னி கேட்டாள்... உங்க பெண்ணுக்கு யார் பாட்டு சொல்லிக் கொடுப்பது. எங்க வீட்டிற்கும் அவரையே ஏற்பாடு செய்ய வேண்டும்...உங்க ஆர்மோனியம்...வீணை...பிடில்...தம்பூரா...எதோ புதுமாதிரியா யிருக்கிறதாமே. நான் பார்க்கலாமா—நீங்க வீடு கட்டியது புதுப்ளானுக அழகா யிருக்கிறதாமே...நாங்களும் கட்ட வேண்டும்.கான்க்ரீட்டா! பழைய மாதிரியா?...நல்ல வேலைக்காரி வேண்டும் கிடைப்பாளா!.....

இதுபோன்ற இன்னும் பதினுயிரம் முகாந்திரங்களைக் கொண்டு முதலில் அடி வைப்பதும், அப்புறம் சிநேகமாவதும் மேலும் பழகப் பழக அரிசி, பருப்பு, புளி முதலியன கடன் வாங்குவதும், திருப்பிக் கொடாத சண்டை ஏற்படுவதும், இரு வீட்டினர்களின் குழந்தைகள் சிறு சண்டை போடுவதும் அதற்காகப் பெரியோர் பெருஞ் சண்டை யிடுவதும், சந்தேகப் பேய் பிடித்த ஆணே, பெண்ணே சந்தேகங் கொண்டு அதனல் பலத்த மனஸ்தாபம் உண்டாவதும், சீட்டு கட்டுவதாகக் கூடி அதில் விரோதம் வருவதுமான கூத்துக்கள் அனேக வீடுகளில் பிரத்யக்ஷமாகக் காணும் அநுபவமாகி விட்டது.

இவ்வித ஆபத்துகளின்றி சிநேகம் செய்வதும் மனத்தாங்கல் இல்லாமல் என்றும் சகஜமாக விருப்பதும் எங்கோ சிலர்தான். நமது காமாக்ஷியம்மாள் அடுத்த வீட்டு நிலைமையைக் கண்டு கொண்டதும் அங்கு செல்வதற்கு மார்க்கம் தேடினுள். ஒரு யோசனை தோன்றியது.

தன் வீட்டிலிருந்து ஓர் லேசான பித்தளைக் கிண்ணத்தை

---

ஒரு அற்ப விஷயத்தில் அபிப்பிராய பேதமுள்ளவர்கள் மற்றவர்களை எல்லாம் இன்னதுதான் சொல்வதென்று இல்லாமல் தூஷித்து விடுகிறார்கள். சில காலத்திற்கு முன் தாமே அந்த விஷயத்தில் இப்போது தூஷிக்கப்பட்டவர்களுடைய அபிப்பிராயத்தையே கொண்டிருந்தது ஞாபகத்தி லிருப்பதில்லை.

அம்ருதவல்லியின் வீட்டுப் புறக்கடையில் போட்டு விட்டுத் தட தடவென்று வெகு தாராளமாக அம்ருதவல்லியின் வீட்டிற்குச் சென்று “அம்மா! புறக்கடையில் பாத்திரங்கள் போட்டிருந்தேன். காக்காய் ஒரு கிண்ணத்தை உங்க வீட்டுப் புறக்கடையில் தூக்கிப் போட்டு விட்டது. அதை எடுத்துக் கொண்டு போக வந்தேன்: என்னம்மா உடம்பு? படுத்திருக்கிறீர்களே! குழந்தைகளுக்கென்ன உடம்பு? ஐயோ பாவம்! ஊசிபோல உடல் மெலிந்து விட்டதே!” என்று அனுதாபப் பட்டுக் கூறினாள்.

இதைக் கேட்ட அம்ருதவல்லி கண்ணீர் வடியத் தன் குறைகளை எல்லாம் விவரமாகக் கூறினாள். அம்ருதவல்லியின் பரிதாபத்தைக் கண்டு உண்மையிலேயே மனமுருகிய காமாக்ஷியம்மாள் “அம்மா! இந்த துர்ப்பலமான நிலைமையில் கண்ணீர் விடாதே! விதி யாரை விட்டது. அனுபவிக்க வேண்டிய வேளை இது. தாயே! நானும் பெண்ணில்லாத பாவி. உடன் பிறப்பில்லாதவள். ஆகையினால் என்னை நீங்கள் பூர்ணமாக நம்பினால் நான் என் சரீரத்தைச் செருப்பா யுழைத்து உங்களுக்கு உதவி செய்கிறேன். மனிதருக்கு மனிதர் இதுதானே முக்கியம். எனக்கு ஒரே ஒரு பிள்ளைதான். அடுத்த வீட்டிற்குக் குடி வந்து 4 தினங்கள்தா னாகின்றன. ஐயோ பாவம்! உங்கள் முகத்தைப் பார்த்தால் மிகவும் பரிதாபகரமாக விருக்கிறது.” என்று கூறிக் கொண்டே உட்கார்ந்து விட்டாள்.

இது கேட்ட அம்ருதவல்லிக்கு, தன் தாயார்தான் உயிர் பெற்று வந்து விட்டதுபோ லாய்விட்டது. தன்னுடைய குறைகளை முற்றிலும் மீண்டும் முறையிட்டு தன்னைக் காப்பதாகக் கூறியதற்கு தன் நன்றியைக் காட்டிப் புலம்பினாள். தன் கணவனிடமும் தெரிவித்தாள்.

---

சிலர் எவ்வளவு புத்திசாலியா யிருப்பினும் யார் யாரிடம் எப்படிப் பேச வேண்டுமென்று தெரியாமல் எல்லோரிடமும் ஒரே மாதிரியாகப் பேசுவதால் இக் காலத்தில் பலர் அவர்களுடைய உண்மையான பேச்சுக்களைத் திருத்திக் கூற இடமேற்பட்டு விடுகின்றது.

காமாக்ஷி:—அம்மா! இதற்காக எனக்கு சம்பளம் வேண்டாம். நான் எப்படியாவது கூலி வேலை செய்து பிழைக்கிறேன். தங்கள் புருஷன் இஸ்கூல் வாத்தியார்; ஆதலால் என் மகனை எப்படியாவது இலவசமாகப் படிக்க வைத்து அவனுக்கு அறிவுக் கண்ணைத் திறந்து விட்டால் பெரும் புண்யமாகும். இது ஒன்றுதான் நான் கோருவது—என்ருள்.

அம்ருதவல்லியின் புருஷன் "ஆகா! அதற்கென்ன! அவனுடைய உயர்தரப் படிப்புக்குக் கூட நானே ஏற்பாடு செய்கிறேன். நானும் ஏழை; நீங்களும் ஏழை. எங்களிருவருக்கும் தாயார் நீங்கள்தான்'' என்று உறுதி கூறினன். அம்ருதவல்லிக்கு அவளது ஜென்மத்தில் கண்டிராத சந்தோஷம் அன்றுதான் உண்டாகியது. காமாக்ஷியம்மாளுக்கும் தன் சபதம் நிறைவேறக் கடவுள் வழி காட்டியதால் களிப்பு மிகுந்தது.

அன்று முதலே காமாக்ஷியம்மாள் தன் மகனை வெகு சந்தோஷத்தோடு கடவுளை வணங்கச் செய்து நல்ல புத்திமதிகளை போதித்துப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பினள்; தானும் அம்ருதவல்லிக்கு வேலை செய்யத் தொடங்கினள்.

"காமாக்ஷி சொல்லியபடி சாதித்து விட்டாள் பார்த்தாயா என்ற கொள்ளித் தனம் குமாரசாமிக்குத் தாண்டவமாடியது. இந்த மொட்டைப் பயல் படித்துக் கிழித்தான். ஏதோ வம்புக்கு மாரடிக்கிருள் என்று கூறுவான். காமாக்ஷியம்மாள் அம்ருதவல்லிக்குச் சகல பணி விடைகளும் செய்துக் குழந்தைகளையும் கவனிக்கலானள்.

அம்ருதவல்லியின் புருஷனுக்கு பத்து வருடங்களாகச் சம்பளம் உயரவே இல்லை. இப்போது 6 ரூபாய் ப்ரமோஷனுயிற்று. இந்த சந்தோஷம் அவர்களுக்குக் கூறத் திறமன்று. இவள்

---

ஆரம்பத்திலேயே தனக்கு நல்ல பெயரும் புகழும் பணமும் குவிந்துவிடவேண்டுமென்று சிலர் ஆசைப்படுகிருர்கள். அவ்வாசைக்குத் தகுந்தாற்போல தன்னுடைய கைச்சாமார்த்தியமும் இருந்தாலல்லவோ? எழுதிய முஞ்சியே மறுபடியும் எழுதுவது? வேறெருவர் எழுதிய கட்டுரையின்

வந்த வேளைதான் 5 ரூபாயாவது உயர்ந்தது என்ற நம்பிக்கை அம்ருதத்திற்கு நன்றாக மனத்தில் பட்டது. ஆகையினால் காமாக்ஷியம்மாளிடத்தில் அன்பு பின்னும் பெருகியது. அந்த அம்மாளையும் வாஸுவையும் இங்கேயே சாப்பிடும்படிக் கூறினாள். அம்ருதத்தின் புருஷனுக்கும் அது சர்வ சம்மதமாகத் தோன்றியது

நாளடைவில் அம்ருதம் சற்று குணமடைந்தாள். தேகத்தில் சிறிது வலிமையும் உண்டாகியது. சில மாதத்தில் ஆண் குழந்தை பிறந்து மிக கஷ்டத்துடன் பிழைத்துக் கொண்டாள். அம்ருதமும் காமாக்ஷியம்மாளும் தாயும் மகளும் போல மனம் லயித்துப் போய் விட்டார்கள். இதைக் கண்ட எல்லோரும் வியப்புறுவார்கள். காமாக்ஷியம்மாளின் புருஷன் நாடோடியாய்த் திரிவதும், இஷ்டமிருப்பின் மனைவியைப் பார்ப்பது, இல்லையேல் திரிவதுமாக ஆய் விட்டான். அனேகர் நற்புத்தி கூறியதுடன் தன் மகன் சில வருஷத்திலேயே சின்ன வகுப்புகளிலிருந்து ப்ரைஸ் வாங்கும் நிலைமைக்கு உயர்ந்து விட்டதும் ஒன்று கூடி நற்புத்தி பிறந்து மகனிடத்தில் பக்ஷம் வைக்க வாரம்பித்தான்.

வாஸுதேவன் வெகு புத்திசாலியாய் ஒவ்வொரு வகுப்பிலும் முதன்மையாகப் படித்துப் பரிசு பெற்று வந்ததால் அவனுக்கு உயர் வகுப்பிலும் ஸ்காலர்ஷிப்பு வெகு எளிதில் கிடைத்து விட்டது. கலாசாலையிலுள்ள உபாத்தியாயர்களிடமெல்லாம் வெகு மரியாதையாயும் பணிவாயும் நடந்து கொண்டு அவர்களுக்கு அபாரமான அன்பு தானாக உதிக்கும்படிச் செய்து விட்டான். அவன் தன்னுடைய புத்தகங்கள், துணி மணிகள், க்ஷவரம், வண்ணான் முதலிய சகல செலவுக்கும் தானே வழி தேடிக்கொண்டு வாத்தியார் வீட்டுப் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்து வந்தான்.

அதனால் அவர்கள் தங்கள் வீட்டு வண்ணானிடம் அவனது துணிகளை இலவசமாக வெளுத்துக் கொடுத்தார்கள். எப்படியோ

---

கருத்தைக் கொண்டே மற்றொன்றை எழுதுவது. ஒரு கச்சேரியில் வாசித்ததையே மறு கச்சேரியிலும் வாசிப்பது. இம்மாதிரியாய் தொழிலில் விருத்தியில்லாமலிருந்தால் பணத்தில் எப்படி விருத்தி புண்டாகும்?

தந்திரமாகவெல்லாம் பழகி தான் பள்ளியில் சேர்ந்த 15-வது வருஷத்தில் எம். ஏ.வகுப்பில் எல்லா ஜில்லாக்களுக்கும் முதலில் பாஸ் செய்து தங்கப் பதக்கமும், நற்சாக்ஷிப் பத்திரமும் பெற்றான். காமாக்ஷியம்மாளின் களிப்பு கரை கடந்து ஓடியது. மகனுக்கு பதக்கம் வந்ததும் அவள் இருதயமடைந்த பூரிப்பு அவளைப் போன்றுள்ள தாய் மார்களுக்கன்றோ தெரியும். பெற்ற மாதா அடையும் ஆநந்தத்தின் ருசி எல்லை கடந்ததல்லவோ! இதன் பொருட்டே "ஆகா! அவள் வயிறு செய்த பாக்கியமே பாக்கியம்!" என்று தாயை உலகம் போற்றுகின்றது. காமாக்ஷியம்மாளின் பாக்கியம் கூற வேண்டுமா?

அம்ருதவல்லியின் குடும்பமும், தேக ரோகமும், கர்ப்ப நோயும் சற்று ஒழுங்கு பட்டு அம்ருதவல்லியும் திடமான மனுஷியாகி விட்டாள். அப்போதும் காமாக்ஷியம்மாள் அவர்களுக்குத் தன்னாலான உதவியைச் செய்வதை நிறுத்தவில்லை. அவளது மகன் எம். ஏ. பரீக்ஷை பாஸானதும் அதற்குமேல் வேறு படிப்பில் சேராமல் வேலைக்குப் பிரயத்தனப் பட்டான். இக் காலத்தில் எளிதில் வேலை கிடைக்கிறதா! எத்தனை சிபார்சுக ளிருந்தும் பலனில்லை. குடும்ப கஷ்டம் நிவர்த்தி யாகும் மார்க்கமே உண்டாகவில்லை.

வாஸுதேவனுக்கு மனக் கலக்கம் அதிகமாகி விட்டது. வித்தைக்குத் தக்க யோக்யதை யுடைய வேலைகள் கிடைப்பது குதிரைக் கொம்புதான். எந்த வேலை யாயினும் நியாயமான வழியில் உழைத்துச் சம்பாதிப்ப தோன்றே தான் கைக் கொள்ள வேண்டும். எத்தனையோ பெயர்கள் பி. ஏ. பி. எல் பாஸ் செய்துவிட்டு வக்கீல் தொழிலில் காலணா வருமானமின்றி வேறு வேலையில் புகுந்து கொள்வதைப் பார்க்கவில்லையா, கண்ட பிணங்களையும் அறுத்து நாய்,பூனை முதலிய ஜீவ ஜெந்துக்களைக் கொன்று பாபத்தை மூட்டை கட்டிக் கொண்டு டாக்டர் பரீக்ஷைக்கு மண்டையை உடைத்துக் கொண்டு

---

கேட்பவர் மனதில் சலிப்பு உண்டாகாமல் திறமையாகப் பாடும் சங்கீத வித்வத் கோஷ்டியில் ஸ்ரீமான் செம்மங்குடி ஸ்ரீனிவாஸ அய்யர் ஒரு சிறந்த பதவியைப் பெற்றிருக்கின்றார். கவி பாரதியாரின் சிறந்த தேசிய

படித்து விட்டு பரீக்ஷையில் தேறி விட்டுக் கடைசியில் அந்த தொழிலில் பலனில்லாது வேறு தொழிலை மேற்கொண்டு ஜீவிப்ப தையும் பார்க்கிறோம்.

இங்ஙனம் அந்தந்த வித்தைக்குள்ள தொழிலே புரண்டு போகும்போது படிப்பின் மதிப்பாவது யோக்யதையாவது? எல்லாம் மலையேறி விட்டது. ஆதலால் ஏதேனும் ஒரு தொழிலில் அமர்ந்துதான் பெற்றோரை பசியின்றி, களைப்பின்றி, காப்பாற்றி ஆதரிக்க வேண்டும் என்ற எண்ணம் வாஸுதேவனின் மனத்தில் தீர்மானமாக உதித்து விட்டது. அதே கவலையாகச் சுற்றலானான்.

நாம் முன் தெரிவித்தபடி செட்டியாரின் அனாதை யாச்ரமத்தில் மானேஜர் வேலை இருப்பதாகப் பத்திரிகை விளம்பரத்தைக் கவனித்து அதில் வேலைக்கு வந்தான். முதலில் 35 ரூபாய் சம்பளம் கொடுப்பதாயும் தர்ம ஸ்தாபனமாக விருப்பதால் தர்மத்திற்குச் செய்வதுபோலச் செய்ய வேண்டுமென்றும் செட்டியார் கூறினார். வாஸுவும் இதுவாவது கிடைத்தால் போதும் என்று நினைத்தும், ஸத் விஷயத்தில் உழைக்கவும் ஒரு சந்தர்ப்பம் வாய்த்ததே என்றும் மிக்க மகிழ்ச்சியுடன் இதை யொப்புக் கொண்டான்.

அவ்வாசிரமத்தில் இவனுக்குள்ள வேலைகளாவன. அதிகாலையில் அங்கு வந்து குழந்தைகளுக்கும் மற்றையோருக்கும் கிட்ட விருந்து பசுவின் பாலைக் கறந்து கொடுப்பது. எங்தெந்த வேளைக்கு எது எது சரியாக நடக்க வேண்டுமோ அவைகளைக் கவனித்தல்; சாமான்களை வாங்கிப் போடுவது. வரவு செலவு கணக்கு பார்ப்பது; அவ்வாசிரமத்து மக்களைக் கவனித்து தேக சுகம் முதல் சகலமும் சரியாக விருக்கிறதா என்று பார்த்தல். வேலைக்காரர்கள் சரியாக வேலை செய்கிறார்களா என்று மேற் பார்வை யிடல். அவர்

---

தேமாகிய "என்று தணியுமிந்த சுதந்திர தாகம்" என்னும் பாட்டை அன்னவரிடம் (ராகமாலிகையில்) கேட்ட பிறகு செம்மங்குடியின் திறமையைப்பற்றி நாம் கூறவும் வேண்டுமோ?

களுக்கு அவ்விடத்திலேயே அமைத்துள்ள பாடசாலையின் நிர்வாகத்தைக் கவனித்தல் முதலிய பலவித வேலைகளே யாகும்.

இவைகளைச் செய்வதில் அவனுக்கு மிக்க சந்தோஷம். ஏனெனில் வேலைகள் அதிகமிருந்தபோதிலும் அங்குள்ள குழந்தைகளிடத்தில் விளையாடிக் களிப்பது அவனுக்குப் பெரும் மகிழ்ச்சியளித்தது. அதோடு அவ்வாசிரமத்தின் அழகும் இடத்தின் அமைப்பும் காண்போர் மனத்தைக் கவர்ந்து செல்லும் எழில் பெற்று விளங்கியது. ஆதலால் ஏழ்மை நிலையில் அடிபட்ட வாஸுதேவனுக்கு ஏழைகளுடன் பழகிக் களிப்பதே பேரானந்தமாகத் தோன்றியது. ஆதலால் அவன் வேலைகள் ஓய்ந்த நேரத்தில் குழந்தைகளுடன் குலாவியவாறு அந்த இயற்கை தேவியின் எழில் அற்புதத்தைக் கண் குளிரக் கண்டு களிப்பான்.

இந்நிலைமையில் சில வருடகால மாயின. அப்போது தான் நாம் முன்பு தெரிவித்ததுபோல செட்டியாருக்கு நஷ்டம் ஏற்பட்டு இவ்வாசிரமத்தை உத்தமர் வாங்கிவிட்டார். புதிய எஜமானர் வந்தவுடனே புதிய வேலைக்காரர்களைக் கொண்டுவந்து விடுவார்களோ, தங்களை எடுத்து விடுவார்களோ! என்ற பயமும், கவலையும் அதிகரித்துவிட்டன. அதில் நாம் முன்பு தெரிவித்தபடி வாஸுதேவனுக்கே கவலை யதிகரித்துவிட்டது.

அவன் தனக்கு இந்த வேலை போய்விட்டால் வேறு வேலை கிடைக்கும் வரையில் எவ்விதம் குடும்பத்தை நடத்துவது! ஈசா! தங்களுக்கு வேண்டிய புதிய வேலைக்காரர்களைத் தான் கொண்டு வைக்கப் போகிறுர்கள் என்று வதந்தியும் உலாவுகிறதே, என்ற ஏக்கம் பிடித்துவிட்டது. அவன் எந்த சமயம் எவ்விதம் எஜமான் கூறிவிடுவாரோ என்றே நிமிடத்திற்கு நிமிடம் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

---

ஒருவன் : என்னய்யா யோசனை செய்கிறீர் ?

(வேலையில்லாத B. A.)—ஒன்று மில்லை. பூகம்பம் வந்த பொழுது பீஹாரில் இருந்திருந்தேனுகில் இப்பொழுது ஜனங்கள் செய்யும் உதவி எனக்கும் சேர்ந்திருக்குமல்லவா?

அந்த ஆசிரமத்துப் பெண்கள் செய்துள்ள கை வேலைகளை எல்லாம் வருடத்திற் கொருமுறை கண் காட்சியைப்போல வைத்து மூன்று தினங்களுக்கு நடத்தி அந்த சாமான்களை விலைக்கு விற்பார்கள். எந்த சாமான்கள் மிகவும் அழகாக விருக்கின்றனவோ அவற்றைச் செய்தவர்களுக்கு தங்கம்,வெள்ளிப் பதக்கங்களை பொது ஜனங்கள் சன்மானிப்பார்கள். சாமான்களை விலைக்கும் வாங்கிக் கொள்வார்கள். அந்த விற்ற பணத்தை யார் சாமான்கள் விற்றதோ அவர்களின் பேரிலேயே பாங்கியில் தனியாகக் கட்டி வைத்து விடுவதும், அவர்கள் படித்து முடிந்து வெளியே வரும்போது அந்தத் தொகையை அவர்களுக்கே கொடுத்து உதவி அனுப்புவதும் ஆசிரமத்து வழக்கம். அந்த மாதிரி கொண்டாட்டத்தை ஆசிரமத்தின் வருஷக் கொண்டாட்டத்தின் போது நடத்துவது வழக்க மாதலால் அதன் வருஷக் கொண்டாட்டம் இவர்கள் வாங்கிய வாரமே வந்து விட்டது.

வழக்கம்போல அந்த வருடக் கொண்டாட்டமும் கண் காட்சியும் ஆரம்பமாயிற்று. இவ் விஷயங்கள் பத்திரிகைகளில் பறந்தன. அனேக ஜனங்கள் பார்ப்பதற்கு வருகிறார்கள். அந்த நிலைமையில் வாஸுதேவனுக்கு அன்று காலையில் ஒரு கடிதம் வந்தது. அது என்னவாக விருக்குமோ என்று நடுங்கியவாறே பிரித்தான். அவன் மனத்தில் இடி இடித்ததுபோலான உத்தமரின் கடிதமே வந்திருந்தது.

"ஐயா!

இக் காட்சி முடிந்த பிறகு உங்களுக்கு ஒரு வாரத்துக்கு கெடுவு கொடுக்கப் பட்டிருக்கிறது: அதாவது 15 தேதிக்குமேல் தாங்கள் இங்கிருந்து வேறு வேலை பார்த்துக் கொள்ளலாம்.

இப்படிக்கு
சர்வோத்தமன்."

---

சிலர் நினைத்த மாத்திரத்தில் ஒரு காரியத்தைச் செய்து முடித்து விடவேண்டுமென்று ஆத்திரப்படுகிறார்கள். எந்த காரியத்திற்கும் கொஞ்சம் அவகாசம் கொடுத்தாலல்லவோ செய்கிறவர்களுக்கும் பதறுமலிருக்க முடியும்?

இதைப் படித்ததும் உண்மையிலேயே அவனுக்கு துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டு வந்து விட்டது. அவனே யறியாமலேயே புலம்பி விட்டான். "எந்த விடத்தில் இனி வேலைக் குப் போவது? என்ன விதமாக நமது பெற்றோரைக் காப்பாற்று வது? அம்ருதவல்லியம்மாள் நமக்குச் செய்த பேருதவிக்குப் பிரதி யுதவி என்ன செய்கிறது?" என்ற கவலையோடு இடிந்து போய் உட்கார்ந்து விட்டான்.

பிறகு உடனே தன்னைத் தானே தேற்றிக் கொண்டான். கட வுள் ஒருவனில்லையா! அவன் நம்மைக் காப்பாற்றாமல் கை விட்டு விடுவானா! ஒருபோதும் விடமாட்டான். அவன் நம்பியவர்களைக் காக்கும் நாயகனில்லையா! என்னை மட்டும் கை விட்டு விடுவானா! மாட்டான்; மாட்டான். கருணைக் கடலே! என்னை மறக்காதே!" என்று தனக்குள் கதறி முறையிட்டான்.

ஏற்கெனவே பயந்த செய்தி விளக்கமாகி விட்டதால் தெம்பே குறைந்து விட்டது. முகத்தில் வருத்தக் களை தாண்டவமாடுகிறது. அதை எல்லாம் அடக்கிக்கொண்டு, அன்று நடக்க வேண்டிய வேலை யை இவனே கவனிக்க வேண்டியவனாகையினால் கண் காட்சி நடந்த இடத்திற்கு வந்து அதையே கவனிக்க லானான். தான் தன்னுடைய கடமையை இங்கிருக்கும் பரியந்தம் செய்து முடித்துவிட வேண் டும் என்ற நல்லெண்ணத்தையே எண்ணினான்.

இதற்குள் இச் செய்தி ஆசிரமத்திலுள்ள மற்றவர்க்கும் தெரிந்து விட்டது. "ஐயோ! இக்கதி யல்லவோ நமக்கும் வரும்" என்று இடிந்து விட்டதோடு "ஏனைய்யா! உமக்குத்தான் நோட் டீஸ் கொடுத்தாயிற்று; வேலையிலிருந்து தள்ளி யாயிற்று. இனியும் ஏன் இதற்கு உழைக்க வேண்டும்? கண் காட்சியாயின் உமக்

---

சில சித்திரக்காரர்கள் தாங்கள் தான் காலஞ் சென்ற ரவிவர்மா வென்று நினைத்துக்கொள்கிறார்கள். ரவிவர்மா கிழித்த ஒரு கோடிற்கும் இவர்கள் எழுதிய உயர்ந்த சித்திரம் ஈடாகவில்லை என்பதை முதலி லேயே உணர்ந்து தொழிலில் விருத்தி செய்தால் ரவிவர்மாவிற்கு அடுத்த படியாகவாவது வந்திருக்கக் கூடும். அதிக கர்வம் அதிக நஷ்டம்.

கென்ன? முகக் காட்சியாயின் உமக்கென்ன சார்? பேசாமல் வீட்டிற்குப் போமே" என்று சிலர் கூறினர்கள்.

இதைக் கேட்ட வாஸுதேவன் "அப்படிச் சொல்லாதீர்கள். எனக்கு இந்த இடத்திலிருந்த ருணம் தீர்ந்து விட்டதுபோ லிருக்கிறது. இதற்காக நாம் கெடுதலை ஏன் நினைக்க வேண்டும்? ஐயோ பாவம். அனாதைகளுக்காக உள்ள இந்த கண் காட்சி நடக்கும் போது நான் போய் விட்டால் நன்றாக விருக்காது. 15 தேதி வரையில் என்று கெடுவு கொடுத்திருக்கிறார்கள். அதற்குள் எனக்கு வேலை யகப்பட்டு விட்டால் நான் எஜமானனிடம் சொல்லிக் கொண்டு போய் விடுவேன். இல்லையேல் 15 தேதி வரையில் உழைத்து விட்டுத்தான் செல்வேன். இதற்குக் கோபமெதற்கு?" என்று கூறிவிட்டுத் தன் வேலையைக் கவனிக்கச் சென்றான்.

மனத்தில் என்னவோ நிம்மதியே இல்லை. அலைபாய்கின்றது. தன் தாயாரிடம் தனக்கு வேலை போய்விட்டதென்பதை எங்ஙனம் தெரிவிப்பது என்ற பெரிய யோசனை யுண்டாகி விட்டது. கண் காட்சியைக் காண நூற்றுக் கணக்கில் கூட்டம் வந்து ஒவ்வொரு அருமையான வேலையையுங் கண்டு ஆசிரமத்துப் பெண்களின் அபிவிருத்தியை நோக்கி மட்டற்ற மகிழ்ச்சி யடைந்து பெண்களைக் கொண்டாடியதோடு அவர்களின் வேலைத் திறத்திற்காக அதிலுள்ள விலைக்கு அதிகமாக பணத்தைக் கொடுத்துச் சாமானை வாங்கிச் சென்றார்கள்.

அனேக விடங்களில் அனாதைகளுக்கென்று ஆசிரமம் இருக்கலாம். இந்த கற்பனைக் கோட்டையில் அமைத்துள்ள இவ்வாசிரமத்தின் விதிகளும் முறைகளும் மெச்சத் தக்கன. இதிலுள்ள பெண்கள் வெளியேறிய போது கையில் ஐவேஜுடன் அனுப்பு

---

பணியாரம் செய்கையில் பக்கத்தில் வந்து உட்கார்ந்து "கொஞ்சம் மாதிரி கொடு பார்க்கலாம்" என்று சாப்பிட்டதும் "தூ! இது நன்றாக இல்லையே!" என்று சொல்லிக்கொண்டே பாதிக்கு மேல் சிலர் தீர்த்து விடுகிறார்கள். இன்னும் நன்றாயிருந்தால் பண்ணின மனிதர்களாவது மீறுவார்களோ மாட்டார்களோ!

வது மிகவும் வியக்கத் தக்கது; ஆகையினால் ஏழைப் பெண்களின் நன்மையை உத்தேசித்து இதற்கு அதிக பணங் கொடுத்தார்கள். இவ்விதம் வியாபாரம் தடபுடலாக நடக்கிறது.

அச் சமயம் ஒரு ஸ்திரீ தன் குழந்தையுடன் அங்கு கூட்டத்துடன் கூட்டமாக சாமான்களை எல்லாம் கவனித்துப் பார்த்துக் கொண்டே வந்தாள். அவளைப் பார்த்தால் என்னவோ முகத்தில் விகாரமான தோற்றம் காணப்படவில்லை எனினும் அவள் அங்குள்ள சாமான்களைப் பார்ப்பதுபோலப் பார்த்து உயர்தரமானவற்றைத் திருட்டுத்தனமாக இங்கு மங்கும் பார்த்தபடியே தன் கையில் வைத்திருந்த ஒரு பைக்குள் போட்டுக் கொண்டாள். இதை யாரும் கவனிக்கவில்லை. இவள் செய்யும் காரியத்தை இவளோடு கூட வந்த 5 வயதுப் பையன் பார்த்துக் கொண்டிருந்ததால் அதுவும் சில சாமான்களை தைரியமாகத் திருடி அம்மாதிடம் கொடுத்தது.

இந்த ரகஸிய சம்பவத்தை அங்கு சற்று தூரத்திலிருந்த வாஸுதேவனே கவனித்தான். அவனுக்குத் திடுக்கிட்டது. இத்தனை பெரிய கூட்டத்தில் இவள் தைரியமாக எடுத்துத் தன் பைக்குள் போட்டுக் கொள்கிறாளே! இதென்ன திருட்டாக விருக்குமா! அன்றி பிடித்தவற்றை எடுத்துக்கொண்டு போகும்போது பணத்தைக் கொடுக்கலாமென் றிருக்கிறாளோ! குழந்தையுமல்லவா இவ்விதம் செய்கிறது. இவளைப் பார்த்தால் கேவலமான பெண் பிள்ளையாகத் தோன்றவில்லையே! எதற்கும் சற்று பொறுப்போம்'' என்று நிதானித்து அவளையே கூர்ந்து கவனிக்கலானான்.

அந்த பெண்பிள்ளை அங்கிருந்த காட்சிப் பொருள்களில் தனக்குப் பிடித்த சிலவற்றை எடுத்துக்கொண்டு இப்படியும் அப்படியும் திரும்பிப் பார்த்துக்கொண்டே அவ்விடத்தை விட்டு வெளியில் வந்தாள். பணங் கொடுக்கும் இடத்திற்குப் போகாமல் வேறு பக்கமாக உள்ள வழியில் பணத்தைக் கொடுக்காது போய்விட்டாள்.

---

மாமியார் வீடு செல்லும் புது மாப்பிள்ளையின் முகமோ, மருமகளின் முகமோ என்றும் இயற்கையாக விருப்பதுபோலில்லாமல் மாறுபட்டு விடுகிறது. சிலருக்கு அபாரமான பயத்தினால் முகத்தில் விகாரமே வந்து

என்ன செய்வான் வாஸுதேவன்! "ஐயோ! மோசம்! மோசம்! அவள் திருடிக்கொண்டு போய்விட்டாளே! இத்தனை ஜனங்களிருக்கையில் நாம் பஜீத் செய்வது அழகாக விருக்காது; பெரிய கலபையாகிவிடும். என்ன தைரியம்? எவ்விதத் துணிச்சலுடன் போய்விட்டாள்! அனுதைப் பெண்கள் செய்த வேலையில் மண்ணைப் போட்டுவிட்டாளே! இப்பொருளுக்கு நானல்லவோ ஜவாப்தாரி! என்ன செய்வேன்? ஈசா! நான் இவ் வேலையை விட்டுச் செல்கையில் இதில் உள்ள பொருளைத் திருடிக்கொண்டு போய்விட்டான் என்கிற கெட்ட பெயரை என் தலையில் சுமத்தவன்றோ இச் செய்கையை நடத்தியிருக்கிருய்! அவளைப் பார்த்தால் பெரிய மனுஷி போல முகத்தால் தோற்றுகிறது. அதற் கேற்ப அபாரமான அழகும், வசீகாமும் பொருந்தி இருக்கின்றன. அத்தகைய மனுஷியின் செய்கை கேவலமாக இருப்பதன் காரணமென்னவாக விருக்கும்?

ஒரு வேளை ஏழையாக விருப்பாளோ! கையில் பணங் கொடுத்து வாங்கச் சக்தியற்றுவிட்டதனுலும், பொருள்மீது கொண்ட ஆசையினுலும் இவ்விதம் செய்துவிட்டாளோ! அல்லது ஏதாவது மூளைக் கோளாறினுலிருக்குமோ? எல்லாம் சேர்ந்து என் தலைக்கன்றோ தீம்பு! இதை உடனே கண்டு பிடிக்க வேண்டுமென்று பல்வேறு யோசனையுடனேயே கவனித்து வந்தான். அவள் சென்றுவிட்டதும் அவளறியாதவாறு தானும் பின்னுலேயே சென்றுன். வீதியில் இறங்கிப் பார்ப்பதற்குள் அவள் எவ்விதம்தான் மாயமாக மறைந்தாளோ தெரியவில்லை. அவளைக் காணுததால் வாஸு திடுக்கிட்டு நடுங்கி "ஐயோ! இப்போதுதானே வந்தாள்! இதற்குள் எவ்விதம் காணுது போயிருப்பாள்? இதென்ன சங்கடம் ஈசா!" என்று அலறிப்போய் நாற்புறமும் தேடி, சுற்றிப் பார்த்தவண்ணம் கதி கலங்கி நின்றுன்.

---

கப்பிக் கொள்கிறது. இது அப்போது அவர்களுக்குத் தெரிவதில்லை. தான் மாமியாராய்—மாமனுராய்—ஆய்விட்டபோது தனக்கு வரும் மருமகள்—மருமகனைப் பார்த்த பிறகு வித்யாசம் தெரிகிறது. உலகமே இப்படித் தான்.

## 8-வது அதிகாரம்

### அருள் நிறைந்த ஆசிரமம்—பொருள் காட்சிச் சாலை

கோவிந்தன் எட்டு குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு வெகு ரோஷத்தோடு சென்ற பிறகு, இவ்விரு பெண்ரூபங்கொண்ட பைசாசங்களும் "ஐயோ! கூப்பிடக் கூப்பிட வாயில் கொழுக்கட்டை அடைத்துள்ளவன் போலப் பதில் பேசாது செல்கிறானே! என்ன நெஞ்சழுத்தமடி! இந்த அனியாயம் எந்த ஊரில் உண்டு? ஊர் சனியன்களைக் காலில் கட்டிக் கொண்டு தன் சொந்த பணத்தையும், சரீர உழைப்பையுங் கொட்டி யார் அழுவார்கள்? இப்படியும் புத்தி கெட்டுப் போய்விடுமா?" என்று கத்தினார்கள்.

தெருச் சண்டை கண்ணிற்குக் குளுத்தி என்பது போல இந்த பேரிரைச்சலைக் கேட்டு யார்தான் சும்மா இருப்பார்கள்? வேடிக்கை பார்ப்பதற்கே கூட்டம் கூடிவிட்டார்கள். அதிலும் சில பாட்டிமார்களுக்கு—வம்பு பேசும் வாயைப் படைத்த அம்மாமார்களுக்கு —இந்த கூத்தைக் கண்டதும் பெரு மகிழ்ச்சி உண்டாவது சகஜமல்லவா! ஏனெனில் நான்கு நாளைக்குத் தங்கள் வம்பர் மகா சபையின் ப்ரஸங்கத்திற்கு இது ஒரு விஷயதானம் கிடைத்ததுபோலாகும். ஆதலால் அவர்கள் இந்த பத்திரகாளிகளின் எதிரே வந்து "ஏம்மா! அவர் ஏன் உங்களைக் கவனிக்காது போகிறார்? என்ன மனஸ்தாபம்?" என்று மெல்ல கயிறு விட்டார்கள்.

ஏற்கெனவே ஆடும் பிசாசுகளுக்குத் தூபமும் போட்டது போல இருவரும் பின்னும் பலமாகச் சத்தமிட்டு "ஐயோ! எங்க

---

பீஹார் அழிந்த வயிற்றெரிச்சலையும், லக்ஷாதிபதிகள் பிக்ஷாதிபதிகளாகி கஞ்சிக் கலைந்துருகுவதையும் பத்திரிகையில் படிக்கும்போதே மனம் கரைகின்றது. அங்கு நேரில் சென்று பார்ப்போருக்கு எவ்விதந்தானிருக்

வீட்டுக் கண்ராவி கோரத்தைக் கூற வேண்டுமா!'' என்ற பல்லவியைத் துடங்கி அதற்கு நெரவல், ஸ்வர ஜாதிகள், ராகமாற்றல், தாளம் மாற்றல் முதலியன சேர்ப்பது போலப் புருஷன்மீது பல குற்றங்களைக் கூறி முகத்தாயித்து வைத்து மீண்டும் பல்லவி எடுப்பையே எடுத்தார்கள்.

இவைகளைக் கேட்டவர்கள், போட்டி பல்லவி பாடித் தம் தம் திறனைப் பாகவதர்கள் காட்டுவதுபோலப் பின்னும் ஏதேதோ பேசிப் பெருத்த கூட்டமாக்கி விட்டார்கள். இதற்குமேல் இரு சனியன்களும் என்ன செய்யக் கூடும்? தம் மானம், பிற மானம் என்ற நிர்ணயமற்றுப் போய்த் தம் புருடனைப் பற்றியே—தம் சகோதரனைப் பற்றியே—தாங்களே பிறரிடம் கேவலமாகக் கூறிவிடின் அந்த வார்த்தைகளைக் கேட்போருக்கு உடனே இவர்களின் யோக்கியதை இவ்வளவுதானா என்கிற தன்மதிப்பு குறைந்து போவதுடன் அந்த புருஷன் மதிப்பும் தானாகவே குறைந்து விடுகின்றது.

மதி கெட்ட பெண்பிள்ளைகள் தங்கள் கணவன்மார் செய்கையை—அது குற்றமற்றதாக விருப்பினும்—பிறரிடம் கேவலமாக, அனர்த்த பாவத்துடன், குற்றலாக எடுத்துக் கூறித் தம்பட்டமடித்தால் தமக்கு அது பெரிய கவுரவமாக எண்ணுகிறார்கள். இதனால் உண்டாகும் லாபமென்ன? பொது மக்களிடத்திலும் கெட்ட பெயர்; வீட்டில் கணவனிடத்திலும் செறுப்படி. இதைத் தவிர வேறு என்ன உண்டு?

அறிவுள்ள பெண்பிள்ளைகளோ—அபாரமான குற்றத்தைத் தம் கணவன்மார் செய்திருந்த போதிலும்—தம்மையே கேவலமாக நடத்திய போதிலும், அவர்களது அக்ரமச் செய்கைகளைத் தம் கண்ணால் கண்டிருந்த போதிலும்—பார புத்தி யுடனும், தம் குடும்ப விஷயம் பிறரறிவது பிசகு; அதுவே முதலாவது மானக் கேடும், இளப்பமும் ஆகும் என்ற பெருந்தன்மையான புத்தி யுடனும்

---

குமோ! சோதனை! சோதனை! இச்சமயம் எல்லோரும் தூங்காதீர்கள். அனாவசியமான வைரங்களையும், தங்கங்களையும் வாங்கி பெட்டிக்குப் பாரமாக வைக்காதீர்கள். அங்கு அல்லலுறும் ஏழைகளுக்கு உங்க

மேற்குறித்த சகலத்தையும் பெட்டியில் போட்டுப் பூட்டுவதுபோல அடக்கி விட்டுப் பார்ப்பதற்கு எத்தனையோ குட்டாகக் குடும் பத்தை நடத்துவார்கள்.

இதனால் தன்மதிப்பும் குறையாமல் புருஷனுக்கும் மனைவி நடந்து கொள்ளும் மாதிரியில் தானாகவே பிரியமும், மதிப்பும் உண் டாகி நாளடைவில் வெகு இன்பமாகி விடும். இதை யறியாத மூடர் களின் ஸெட்டில் முதல் நம்பரான ஓலகாம்பாள் செய்யும் வேலை எப்படி இருக்கும். இரு பக்கமும் தாக்கக் கூடியதாகத்தான் இருக்கும்.

அசட்டுக் கூக்குரலிட்டுத் திட்டிவிட்டு, குரைத்த நாய் வாயை மூடுவதுபோல வீடு வந்து சேர்ந்தார்கள். "ஊரார் இழவுக்கெல்லாம் இவன் இப்படி மாரடிக்கையில் நான் மட்டும் ஏன் சுதந்திரமாக விருக்கக் கூடாது? என் தம்பியை வீட்டோடு கொண்டு வைத்துக் கொள்கிறேன். அவனுக்கு நிறையச் செய்கிறேன். என் மனிதர்க ளும் தின்று உருட்டட்டுமே! நிறையக் கடனாகி அம் மனிதன் தவிக்கட்டுமே!" என்ற பெருங் கெடுமதி உலகாம்பாளுக்குத் தோன்றியது.

பாலசந்திரன் கோவிந்தனின் தமயன் மகன். அவனை குழந் தையிலிருந்தே கோவிந்தன் வைத்துக் கொண்டிருப்பதால் அவன் ஓலகாம்பாள் கையில் அகப்பட்டுக் கொண்டு படும்பாட்டைக் கூற வேண்டுமா! அவன் தெய்வப் பிறப்பென்றே கூற வேண்டும். அவன் இவர்கள் எதிரிலேயே வரமாட்டான். வெகு டக்காக நடந்து கொள்வான். அவனுக்கு வேறு வகுப்பு படிப்பு ஏற்பட்டு விட்ட தால் வெளியூருக்குச் சென்று ஹாஸ்டலில் சேர்ந்து விட்டான். லீவு நாளில் மட்டும் இங்கு வருவான்.

கோவிந்தன் கதிர்வேலு இறந்த பிறகு பாலுவை இனி இங்கு வர வேண்டாமென்றே கூறி விட்டார். அவனுக்கு மாதச் செல

---

ளுடைய மனமார்ந்த உதவி புரியுங்கள். உங்களாலான பணத்தையோ, துணி, மணி முதலிய எதையோ அனுப்புங்கள். இது நமது புண்ணியத் திற்கே யாகும்.

கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானும் அதுவாகப் பாவித்துத் தானுந்தன்
பொல்லாச் சிறகை விரித்தாடினாற் போல

**எங்கள் பிரசித்தி பெற்ற**

## "மெடல்" மார்க்கு

**பட்டுச் சேலைகளைப் பார்த்து**

இதர நெசவுக்காரர்களும், பாக்டரிகளும் விதேசப் பட்டு நூலைக் கொண்டு தயாரித்த சேலைகளை மார்க்கட்டில் விற்பனை செய்து வருவதாகத் தெரிய வருகிறது.

## ஆகையால்

நீங்கள் வாங்கும் பட்டுச் சேலைகளில் எங்கள் "மெடல் மார்க்" டிக்கட் இருக்கிறதா என்பதைக் கவனித்து வாங்குங்கள்.

## இந்த டிக்கட்டுதான்

உங்களையும், உங்கள் வியாபாரிகளையும் ஏமாறச் செய்யாமல் இருப்பது

---

கெய்ஸர்—இ—ஹிண்ட் உல்லன்,
காட்டன் & ஸில்க் மில்ஸ் லிமிடெட்,
பெங்களூர்.

சென்னை ராஜதானி ஸோல் ஏஜண்டுகள் :—

மெஸர்ஸ்

## டி. ஆர். என். சாமி,

2-74, கிடங்குத் தெரு, : மதராஸ்.

# ரூ.18000, ரொக்கப் பரிசுகள்.

## உங்களுக்கோர்

## அதிர்ஷ்டம்!

### ஆயிரக்கணக்கான ரூபாய்
### பரிசுகளாய் பெறலாம்.

நம் நாட்டு கைத்தொழில்களுக்கு உதவி புரியவும் அவைகள் தழைத்தோங்கும்படி ஆதரவு அளிக்கவும் ஸ்தாபிக்கப்பட்ட இக் **கைத்தொழில் அபிவிருத்தி நிதி**யின் சர்டிபிகேட்டுகளை இன்றே வாங்குங்கள்.




**ஸர்டிபிகேட் 1-க்கு**

**ரூபாய் 1 தான்.**

4000-சர்டிபிகேட்தாரர்களுக்கு

**ரூபாய் 18,000**

பரிசுகளாய் கொடுக்கப்படும்.

உங்களுக்கு பரிசு வராவிடில் கட்டின பணத்தை 25% லாபத்துடன் வாபீசு செய்யப்படும். இது லாட்டரி அல்ல. இன்றே உமது அதிர்ஷ்ட நாள்.

நாணயமுள்ள விற்பனையாளர்கள் எல்லா ஊர்களிலும் தேவை.

**ஸ்தாபிகர்கள் :**

**பப்ளிக் பாங்க் ஆப் இந்தியா லிமிடெட்**

**70, லாங்கு பஜார், வேலூர்.**

ஒரு அரிய சந்தர்ப்பம்!

# இனி ஸ்திரீகளும்

## இன்ஷியூர் செய்யலாம்.

தற்போது நமது தேசம் மாறுபட்டுள்ள நிலைமையில், முன்னை விட அதிகமான ஸ்திரீகள் தங்கள் ஆயுளை இன்ஷியூர் செய்ய வேண்டியதின் அவசியத்தையும், அதற்கு வேண்டிய வசதிகள் அளிக்க முடியு மென்பதையும் கருதி,

# யுனைடெட் இந்தியா அஷியூரன்ஸ்

## கம்பெனி, லிமிடெட்.

சில நிபந்தனைகளுக் குட்பட்டு, ஸ்திரீகளின் ஆயுள் இன்ஷியூரன்ஸ்களை இப்பொழுது ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கிறது.

ஸ்திரீகளின் ஆயுள் இன்ஷியூரன்ஸ் சம்மந்தமான முழு விவரங்களும் தங்கள் கடிதம் கண்டவுடன் அனுப்பப்படும்.

படித்த ஸ்திரீகளிடமிருந்து இந்த கம்பெனியின் ஏஜண்டு பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்தக் கம்பெனியின் ஏஜண்டாக இருப்பதால், நமது ஜன சமூகத்திற்குத் தொண்டு புரியவும், ஒரு நிரந்தரமான வருமானம் அடையவும் சந்தர்ப்பம் வாய்க்கின்ற தென்பதைக் கவனியுங்கள்.

"யுனைடெட் இந்தியா"
கட்டடம்
செம்புதாஸ் தெரு,
சென்னை.

எம். கே. ஸ்ரீநிவாஸன்,
பி. ஏ., பி. எல்.,
மானேஜிங் டைரெக்டர்.

# "ஜகன்மோகினி"

## மாதாந்த நாவல் சஞ்சிகை

ஆசிரியை: ஸ்ரீமதி

## வை. மு. கோதைநாயகி அம்மாள்

வருட சந்தா ரூ 1-8-0. தனிப்பிரதி அணா 2

---

ஸ்ரீமதி
வை. மு. கோதைநாயகி அம்மாள்,
எழுதிய நாவல்கள்.

ரூ. 2.8.0.
வைதேகி
பத்மசுந்தரன்
ராதாமணி
சாருலோசனா
காதலின் கனி

ரூ. 2.0.0.
நவநீதகிருஷ்ணன்
ருக்மிணிகாந்தன்
சாமளநாதன்

ரூ. 1.12.0.
சண்பகவிஜயம்
கௌரீமுகுந்தன்
ஸாரமதி

ரூ. 1.8.0.
சோதனையின் கொடுமை

ரூ. 1.4.0.
பரிமள கேசவன்
உத்தமசீலன்

ரூ. 1.0.0.
சுகந்தபுஷ்பம்
கதம்பமாலை

ரூ. 0.14.0.
கோபாலரத்னம்

ரூ. 0.8.0.
நளினசேகரன்
வீரவஸந்தா
மூன்று வைரங்கள்
படாடோபத்தின் பரிபவம்

ரூ. 0.4.0.
ஜெயஸஞ்ஜீவி

---

"ஜகன்மோகினி" ஆபீஸ்,
26 தோடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

22 நாவல்களும் ஒரே சமயத்தினால் வாங்கினால் ரூ. 22/.க்குக் கொடுக்கப்படும்.

முதலில் ரூ 12 முன் பணமனுப்பி ரயில்வே ஸ்டேஷனின் பெயரைத் தெரிவித்தால் 22 புத்தகங்களையும் அனுப்பிவிடுகிறோம். மீதியுள்ள பத்து ரூபாயை மாதம் ரூ. 5 வீதம் இரண்டு மாதங்களில் அனுப்பலாம்.

இந்த ஏற்பாடு இந்தியாவிலுள்ளவர்களுக்கு மாத்திரம் தான் என்பதைக் கவனிக்கவும்.

வுக்கு மட்டும் நேராக அனுப்பி விடுவதாகக் கூறிவிட்டார். ஆதலால் அவன் அங்கேயே நின்று விட்டான். அவனுக்கு ஆதி முதல் ஸ்ரீமணியினிடத்தில் அவனை மீறிய ப்ரீதியும், உள்ளாழ்ந்த அன்பும் உண்டாகி இருந்தன. ஆனால் அவைகளை அவனைப் படைத்த கடவுளே அறிவாரோ மாட்டாரோ சந்தேகம். கோவிந்தனின் மனைவியால் உண்டாகும் துன்பத்தைச் சகிக்கும்படியான சக்தியை ஸ்ரீமணியின்பால் கொண்ட காதலே அளித்ததெனலாம்.

ஸ்ரீமணியின் வீட்டிற்குத் தன்னை ஓர் காரியமாகக் கோவிந்தன் அனுப்ப மாட்டாரா என்று தினம் எதிர் பார்ப்பான்: அப்படி நேரின் குதூகலமாக ஓடுவான். அவள் பள்ளிக்கூடம் செல்லும் போதும், வீதியிலிருக்கும் போதும் நேரத்தைத் தெரிந்துகொண்டு உள்ளங் களிக்காமல் செல்லமாட்டான். இது யாருமே அறியாது வெகு நாட்களாக மனக் கோட்டைக்குள் நடக்கும் விஷயம். இப்போது ஸ்ரீமணிக்கு அகாலமாயும், கோரமாயும் நேர்ந்த மரணத்தைக் கேட்டு அடங்காத துக்கமும், ஏக்கமும், ஏமாற்றமும் கொண்டு அபாரமான சோகத்தி லாழ்ந்து விட்டான். இச்சமயம் தான் வேறு ஊருக்குச் செல்ல நேர்ந்தது தனக்கு நிம்மதியானதென்று எண்ணினான்.

ஸ்ரீமணி உயிருட னிருக்கும்போதே அவளுக்கும் தெரியாது புதைந்து கிடந்த இந்த ரகஸியம் இனி வெளி வரவேண்டிய காரணமில்லை யாதலால் தன்னுள்ளத்தோடு மருகித் தவிக்கலானான். இப்பிசாசைப் பற்றி சிந்திப்பதையும் விட்டான். எப்போதேனும் கோவிந்தனை மட்டும் வந்து சந்தித்துச் செல்லலானான். அவன் செய்தி அதோடு முடிவடைந்து விட்டது என்றே கூறலாம்.

---

வீணாகக் குதிரைப் பந்தயத்திலும், லாட்டரியிலும், சூதாட்டத்திலும் உங்கள் அருமையான பணத்தைக் கொட்டி ஏமாறுகிறீர்கள். அதனால் லாபம் வருமென்று எதிர் பார்த்து நஷ்டமே அடைகின்றீர்கள். அந்த பணத்தை பீஹாரின் பரிதாபகரமான நிலைமைக்கு அளிப்பீர்களானால் நீங்கள் கோராமலேயே கடவுளின் அருளாகிய பலனைக் கொடுப்பார்.

கோவிந்தன் இக் குழந்தைகளை அழைத்துக் கொண்டு அவர்களை விட்டுப் போனால் போதும் என்ற ஆத்திரத்தினால் புறப்பட்டவர் எங்கே செல்லலாம் என்று வண்டியிலேயே யோசித்தார். குழந்தைகளை ஏதேனும் ஒரு வேடிக்கைக்கு அழைத்துச் செல்ல எண்ணினார்.

வழியில் ஓர் விளம்பரத்தைக் கண்டார். அனாதை யாச்ரமத்தின் மாணவிகள் தம் திறமையினால் செய்த கைவேலைப் பொருள்களின் காட்சி நடைபெறும், என்று பெரிய கொட்டை எழுத்துக்களிருப்பதைப் பார்த்ததும் அவர் மனத்தில் ஏதோ அபாரமான சந்தோஷமும் நம்பிக்கையும் உண்டாயின. உடனே அவர் வண்டியை அங்கு ஓட்டச் செய்தார்; வண்டியும் அங்கு சென்று நின்றது.

அந்த ஆச்ரமத்தின் அழகை வீதியிலிருந்து பார்க்கும் பொழுதே கோவிந்தனுடைய மனது ஆநந்தத்தால் பூரித்தது. அவ்வாசிரமம் அமைத்துள்ள இடமோ வெகு மனோகரமானது. மனச் சாந்திக்கு ஏற்றது. அதன் இயற்கை யழகுடன் செயற்கை யழகும் கூடிப் பிரகாசித்தது. பொருள் காட்சியைக் காணக் குழந்தைகளை அழைத்துக்கொண்டு அதற்குள்ள பிரவேசக் கட்டணத்துடன் உள்ளே சென்றார்.

குழந்தைகளுக்கு வேண்டிய தின்பண்டங்களையும் ஆசிரமத்துப் பெண்களே செய்து விற்றார்கள். அவற்றை முதலில் குழந்தைகளுக்கு வாங்கிக் கொடுத்தார். குழந்தைகளுக்கு வேறு என்ன வேண்டும். தின்பண்டத்தைத் தின்னும் ஆநந்தத்துடன் அங்குள்ள விளையாட்டுப் பொருள்களைப் பார்த்து மனமகிழ்ச்சி யடைந்து "மாமா! இது வேணும்; அது வேணும்!" என்று கேட்டார்கள். ஏதோ சிலவற்றைக் கோவிந்தன் வாங்கிக் கொடுத்தார்.

---

ஒவ்வொரு தினமும் நாம் உண்ணும் உணவில் ஒவ்வொரு கவளத்தை அந்த ஏழை மக்களுக்காகக் குறைத்துக்கொண்டு அந்த அரிசியைச் சேர்த்து அனுப்பினால் ஒரு கவளத்து அரிசியை தண்ணீரும் பருக்கையுமாகக் காய்ச்சி ஏழைகள் இரண்டு பேர்கள் குடித்துப் பசியாறுவார்கள். அப்ப

"இந்த ஆசிரமத்தின் நோக்க மென்ன. இதை யார் நடத்துகிறார்கள். இதன் விதிகள் என்ன?" என்பதை யறிய கோவிந்தன் ஆசித்தான். அந்த ஆசிரமத்துப் பெண்கள் வெகு அடக்கமாயும் பணிவாயும் ஆடம்பரமற்ற தன்மையுடனும் துல்லியமான வெள்ளைக் கதர் சேலைகளை அணிந்துகொண்டு அவரவர் சாமான்களின் முன்பு அவரவர் நின்ற காட்சி மிக்க மனோகரமாக விருந்தது. அதைக் கண்ட கோவிந்தனுக்கு ஆநந்த மேலீட்டால் கண்ணீர் உதிர்ந்தது.

இவர்களுடைய தலைவியான மீனாட்சியம்மாளும் நெற்றியில் விபூதியும், கதர் வெள்ளைப் புடவையும் அணிந்து "மகா பரிசுத்தவதி இவள்." என்று காண்போர் எளிதில் ஊகித்தறியும் வண்ணம் சிவப் பழம்போல ஒரு புறம் வீற்று இக் காட்சியைக் கவனித்துக்கொண்டிருப்பதைக் கண்ட கோவிந்தன் "அந்த அம்மாள்தான் இவர்களின் தலைவியாக விருக்கக் கூடும்" என்று யூகித்தவாறு அவ்வம்மையாரருகில் சென்று வணங்கி நின்று "தாயே! தங்களைப் பார்த்தால் பரிசுத்த புனிதவதி என்றும், சிவப்பழமென்றும் தோன்றுகின்றது. தாங்கள் வீற்றிருக்கும் பாவனையிலும் பெண்கள் தங்களிடம் பேசும் மாதிரியிலும் தாங்கள் இவர்களின் தலைவியாக விருக்கக்கூடும் என்று நினைக்கிறேன். அது சரிதானே!" என்று வெகு வணக்கமாகக் கேட்டார்.

இதைக் கேட்ட மீனாட்சியம்மாள் மிக்க மரியாதையோடு பிரதி வந்தனம் செய்து கோவிந்தனுக்கு ஓர் ஆசனங் கொடுத்து அமரச் செய்துவிட்டு "ஐயா! தாங்கள் யூகித்தது ஒருவிதத்தில் சரியே! ஆயினும் இந்த ஆச்ரமத்திற்கு மட்டுமல்ல. உலகத்திற்கே தலைவி சாக்ஷாத் ஜகதாம்பிகை இருக்கையில் கேவலம் ஊனுடல் கொண்ட நரமனுஷி நான் தலைவியாவது, அதிகாரியாவது; அதொன்றுமில்லை. கடவுளின் கூலியாளாகிய என்னை இக் குழந்தைகளைப்—திக்கற்ற பறவைகளை—

---

டியே எத்தனை ஏழைகள் பசியாறக்கூடும் பாருங்கள். நேயர்களே! பீஹார் விஷயத்தில் "யோசனையே வேண்டாம்; கட்டாயம் கொடுத்துத்தீருவேன்" என்ற பிடிவாதத்தைக் கைக்கொள்ளுங்கள்.

பார்த்துக் கொள்; அவர்களுக்கு வேண்டியதை கவனித்துச் செய். உனது ஜென்மத்தில் உனக்கிட்ட கட்டளை இது.'' என்று அந்த ஆண்டவன் ஆஞ்ஞாபித்துள்ளபடி ஏதோ செய்து வருகிறேன்.'' என்ருள்.

மீனாட்சியம்மாளின் பரந்த ஞானத்தின் வளர்ச்சியும், தெய்வ பக்தியும் கோவிந்தனை வியக்கச் செய்தன. "ஆகா! என்ன ரஸமான பதில்! என்ன குணம்!'' என்று கோவிந்தன் புகழ்ந்தவாறே "தாயே! மனத்தில் எத்தகைய சங்கடமோ, துக்கமோ, கவலையோ இருக்கு மாயின் தங்களைப் போன்ற அறிவாளிகளின் சம்பாஷணையைக் கேட்கக் கேட்க அவைகள் பறந்து விடுமென்றே நினைக்கிறேன். இவ்வாசிரமத்தை நான் முன்பின்னறிய மாட்டேன். இதற்கு 8 மைலுக்கு அருகிலேயே வெகு வருஷ காலமாக விருந்தும் இத் தகைய ஓர் உயர்தர ஆசிரமம் இருப்பதை யறிய மாட்டேன். இன்று விளம்பரங்களைப் பார்த்த பிறகே தெரிந்து கொண்டேன். தாயே! இதை ஸ்தாபித்தவர்கள் யார்? இதன் விதிகள் என்ன? நானறியலாகுமா?'' என்ருர்.

**தலைவி:**—ஐயா! இது ஒரு செட்டியாரால் ஆரம்பிக்கப்பட்டு சில வருடங்களாகச் செவ்வனே நடந்து வந்தது. அவருக்குற்ற சில நஷ்டங்களால் இதன் நிர்வாகத்திற்குச் சிரமமேற்பட்டது. அதனல் இதை உலகமறிந்த ப்ரபு, கலியுகக் கர்ணன் என வழங்கப்படும் சர்வோத்தமர் இப்போதே சில தினங்களுக்கு முன் விலைக்கு வாங் கிக் கொண்டார். இனி அவருடைய ஆசிரமந்தான் இது. இது நாதியற்ற குழந்தைகளையும், மனித திக்கற்றுச் செல்வம் மாத்திர மிருக்கும் குழந்தைகளையும் ஆதரிக்கும் ஏழை ஆசிரமம். இதி லிருந்தே கல்வியும் கற்றுக் கொண்டு வேறு இடங்களுக்கு அவரவர் களின் இஷ்டம்போல வேலைக்குச் செல்லலாம். பணம் இருந்தும் மனித சகாய மற்ற குழந்தைகளை அவர்களின் பணத்தைக்கொண்டு போஷித்து வருவதும் இச் சங்கத்தின் விதிகளில் ஒன்ருகும்.

---

"எனக்கு 5 வயதில்தான் கல்யாணமாயிற்று. 14 வயது முதல் இது வரையில் 10 பிள்ளைகளைப் பெற்றும் குண்டுபோல விருக்கிறேன்: ஆத லால் பாலிய விவாகத்தில் தீங்கே இல்லை.'' என்று ஒரு பாட்டியம்மாள்

இதைக் கேட்ட உடனே கோவிந்தனுக்கு அபாரமான சந்தோஷம் உண்டாகிவிட்டது. "தாயே! தற்போது நானும் ஒரு சுமையைத் தங்கள் தலையில் ஏற்றுவதற்கே நினைக்கிறேன். இதோ இந்த எட்டுக் குழந்தைகளும் திக்கற்ற பரதேசியிலும் பரதேசிகள். (கதிர்வேலின் சரிதை பூராவும் கூறி) இவ்விதம் முடிந்தது. மனித திக்கும் இல்லை. பணத்தின் பலமும் கிடையாது. என்னுடைய கதையோ கூறவேண்டாம். சகோதரி என்றும், மனைவி என்றும் இரு பெரும் ராக்ஷஸிகளை வீட்டில் வைத்துத் தவிக்கும்படி என் தலையில் ஈசன் எழுதிவிட்டார். நான் அந்த மூடப் பெண்களின்பால் படுந் துன்பத்தைச் சகிக்க முடியாது. அந்நிலைமையில் இக் குழந்தைகளை வைத்துக்கொண்டு ஒண்டிக்காரன் என்ன செய்வேன். சதா துன்பப்படுகிறேன். இந்த ஆசிரமத்தைக் காட்டி என் கவலையைப் போக்கத்தான் கடவுள் இன்று என் கண்ணில் அவ் விளம்பரத்தைக் காட்டினார் என்று நினைக்கிறேன். (தன் மனைவியின் விஷயங்களைக் கூறி கண்ணீர் வடிய) "தாயே! இக் குழந்தைகளையும் தாங்கள் ஸ்வீகரிக்க வேண்டும். இவர்களுக்குத் தாயும், தந்தையும், சகோதரியும் இனி நீங்கள்தான்" என்று கூறிப் புலம்பினார்.

இதைக் கேட்ட தலைவி எட்டுக் குழந்தைகளும் தங்கப் பதுமைபோலிருப்பதைப் பார்த்து மிக்க விசனமுற்று "ஐயோ! அழகைக் கொடுத்த கடவுள் அதிர்ஷ்டத்தைக் கொடுக்கவில்லையே! ஹூம். விதி; விதி. இம்மாதிரியான அனாதைக் குழந்தைகள்தான் இங்கு நிறைந்திருக்கிறார்கள். ஐயா! இந்த ஆசிரமத்தின் மேல் பார்வையும் கவனிப்பும் என்னுடைய தொழிலேயன்றி எனக்கு மற்ற அதிகாரம் கிடையாது. தாங்கள் இதன் சொந்தக்காரராகிய சர்வோத்தமரையே நேரில் கண்டு கேளுங்கள். அவர் அனுமதிப்பார். பிறகு நானும் வேண்டுமாயின் சொல்லலாம்." என்றாள்.

இதைக் கேட்டு மிக்க சந்தோஷ மடைந்த கோவிந்தன் மிகவும் பணிவாகப் பேசத் தொடங்கி "தாயே! நான் சென்று வருகி

---

லெக்சர் செய்கிறான். அந்த பாட்டியம்மாளின் மகனே சாரதா பில்லை யாதரித்துத் தன் மகளுக்கு 15 வயதாகியும் விவாகம் செய்யாதிருக்கிறார். எல்லோருக்கும் வீட்டில் ஒரு நியாயம்; வெளியில் ஒரு நியாயம் போலும்.

றேன். சர்வோத்தமரிடம் நாளைக்குச் சென்று கேட்கிறேன். பிறகு தாங்கள் குழந்தைகளைப் பார்த்துக்கொள்ள வேண்டும். அதைப் பற்றி நான் கூறுவதற்கு ஒன்றுமில்லை'' என்று கூறி விட்டு அவளிடம் உத்திரவு பெற்றுக் கொண்டு காட்சிகளைப் பார்த்துக் களித்துக் கொண்டே வருகிறார்.

“இந்த எட்டு குழந்தைகளையும் நாம் எவ்விதம் ஆதரிப்பது? என்ன செய்வது சர்வேசா !'' என்று ஏங்கிய கோவிந்தனுக்கு இவர்களுக்கு ஓர் இடம் அகப்பட்டு விட்டது என்கிற சந்தோஷம் எம்மட்டு மிருக்கிறதோ அவ்வளவு இவர்களைப் பிரிய வேண்டிய விசனமும் கூடிவிட்டது. குழந்தைகளிடத்தில் இச் செய்தியைத் தெரிவித்தால் என்ன சொல்வார்களோ, தனித்த ஆசிரம வாசத்தை வேண்டுவார்களோ, பயப்படுவார்களோ, அழுவார்களோ! என்ன செய்வார்களோ ! இப்போதே அதை நினைத்தால் பயங்கரமாக விருக்கிறதே! என்ன செய்வேன்?'' என்று வருந்தியவாறு அங்குள்ள காட்சிகளை எல்லாம் பார்த்து விட்டுக் குழந்தைகளை யழைத்துக் கொண்டு வீட்டிற்கு வந்தார்.

இரவு தூக்கமே பிடிக்கவில்லை. ஜெயமணியின் மனத்தை யறியும்பொருட்டு “அம்மா! ஜெயமணி! அங்கு பார்த்தாயே கண் காட்சிப் பொருள்கள் ! அவைகளெல்லாம் எப்படி இருந்ததம்மா! உனக்குப் பிடித்ததா !'' என்றார்.

ஜெய:—மாமா ! ரொம்ப நன்றாக விருந்தது. மயில்வாகன சுப்பிரமணியன் நிஜம் போலவே இருந்தது பார்த்தீர்களா! சரஸ்வதியும் அப்படியே இருந்தது. எல்லாம் ரொம்ப அழகா இருந்தது மாமா! அதைப் பார்த்தால் அதை விட்டு வரவே மனஸாகவில்லை.

கோவிந்:—அம்மா! உனக்கும் அம்மாதிரி கை வேலைகள் செய்யத் தெரியுமோ! செய்வாயோ! ஆசை யுண்டோ !

---

கடன் வாங்கிய பணத்தைத் திருப்பிக் கொடுக்க அழுகிறார்கள். ஆனால் தமக்குச் செலவழித்து நகைகள் புடவைகள் வாங்குவதற்கு மட்டும் பணம் எப்படி முளைக்கிறதோ தெரியவில்லை.

ஜெய:—ஓ! ரொம்ப ஆசை இருக்கிறது மாமா! கற்றுக் கொடுத்தால் நான் கட்டாயம் அதே போலச் செய்வேன். அதற்கு வேண்டிய சாமான்களை யார் வாங்கித் தருவார்கள். அப்பாவும் அக்காவுந்தான் இறந்து விட்டார்களே!—என்று வருந்தினாள்.

கோவி:—அங்கு வேலை செய்து வைத்திருக்கும் சகல பெண்களும் உன்னைப் போன்று தாய் தந்தைகள் இல்லாதவர்களே யம்மா! அதனால்தான் அங்கிருக்கிறார்கள். அனாதைகளை ஆதரிப்பதற்காகவே அந்த ஆசிரமம் ஏற்பட்டிருக்கிறது. கண்ணே ஜெயா! உங்களையும் நான் அங்கேயே விடலாமென்று நினைக்கிறேன். உங்களை வெகு நன்றாக அங்கு ஆதரிப்பார்கள். நானோ ஒண்டி ஆண் கட்டை. என் மனைவியின் விஷயமென்னவோ உங்களுக்குத் தெரியும். நான் லீவு முடிந்து விட்டால் தினம் 9 மணிக்கு ஆபீஸுக்கு ஓட வேண்டும். இரவு 7–8 மணிக்குத்தான் வருவேன். அதுவரையில் நீ இத்தனை சின்ன குழந்தைகளையும் வைத்துக் கொண்டு என்ன செய்வாய் பாவம். இவைகளை எல்லாம் யோசித்துத்தான் சொல்கிறேன்.

இதைக் கேட்ட வுடனே ஜெயமணிக்கு துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டு வந்து விட்டது. விம்மி விம்மி அழ வாரம்பித்து விட்டாள். கேவலம் 10 வயதுப் பெண்ணிற்கு என்னதான் தெரியும் பாவம். “மாமா! நாங்கள் தனியாக இருக்க வேண்டுமா! ஐயோ உங்களை விட்டுப் போக வேண்டுமா?” என்று புலம்பினாள்.

182964

கோவிந்தன் அவளுக்குச் சமாதானம் கூறி “அம்மா! வருந்தாதே! என்ன செய்வது? எல்லோருக்கும் பெரியவளாகிய நீயே அழுதால் குழந்தைகள் என்ன செய்வார்கள்? ஒரு பெண்பிள்ளையின் துணை இருப்பது அவசியமல்லவா! அம்மா! அங்கு உன்னைப் போன்ற சகோதரிகள் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் தெரியுமா!

---

வினா:—என்ன சார்! மூதேவிபோல எல்லோரும் எட்டு மணிக்கு எழுந்திருக்கிறீர்களே!

விடை:—இது தெரியாதா! எங்களுக்கெல்லாம் தாமரைக்கண்கள்; சூரியனைக் கண்ட பிறகுதான் மலரும்.

அவர்கள்தான் உனக்குச் சகோதரிகள். அங்குள்ள தலைவி மீனாட்சியம்மாள் என்பவர் மிகவும் நல்லவர்கள். உன்னைத் தாயார்போல பார்த்துக் கொள்வார்கள். நீ பயப்படவேண்டாம். நானும் அடிக்கடி வந்து பார்க்கிறேன். என் செல்வமே! குழந்தைகளுக்குத் துணையும் உனக்கு ஆதரவும் அங்கு சென்றால்தான் ஏற்படும். தைரியமாக விரு'' என்று பலவிதமும் தேற்றினார்.

ஜெயமணி சிறியவளாயினும் கோவிந்தன் கூறிய விஷயங்களைக் கவனமாகக் கேட்டுத் தன்னுடைய நிலைமையை நன்றாகத் தெரிந்து கொண்டாள். தனக்கு இங்கிருப்பதைவிட அங்கு சென்றால்தான் சுகமுண்டு என்பதை நன்றாக உணர்ந்துகொண்டு பிறகு இசைந்தாள். கோவிந்தனுக்கு ஒரு பெரிய பளுவு நீங்கியதுபோலச் சந்தோஷ முண்டாகியது.

மறுதினம் காலையில் குழந்தைகளுக்கு வேண்டிய ஆகாராதிகளைக் கொடுத்துப் பின் அவர்களையும் அழைத்துக்கொண்டு "ஸ்வாமீ! குழந்தைகளுக்கு இடம் கிடைக்க வேண்டுமே!'' என்று வேண்டிக் கொண்டே சர்வோத்தமரின் வீட்டிற்கு சென்றார். சர்வோத்தமரைக் கோவிந்தன் நேரில் கண்டதில்லை. ஆகையினால் அவர் ஏதோ படாடோபமாக இருப்பார் என்று எண்ணி இருந்தார்.

நமது தியாக மூர்த்தியாகிய சர்வோத்தமரோ மிகவும் சாதாரணமாய் உடை யணிந்து மேலுக்குச் சொக்காயு மின்றி வீதிப் பக்கமுள்ள தோட்டத்தில் பசுமாடுகளுக்கு அகத்திக் கீரையைத் தம் கையினாலேயே கொடுத்துக் கொண்டிருந்தார்.

இதைக் கண்ட கோவிந்தன் அவரை எஜமான் என்று எவ்விதம் கருத முடியும்? 100 ரூபாய்க்கு மேல் வருமானமும் இரண்டு ஸாஹிப், பகதூர் பட்டங்களும் பெற்றுவிட்டால் தம்மைத் தாமே

---

வினா:—என்ன ஐயா! எந்த பத்திரிகையைப் பார்த்தாலும் "இதிலுள்ள கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனையே'' என்று எழுதப்பட்டிருக்கிறதே! ராஜீய, தேசியத் தலைவர்கள், மற்றும் பல பிரமுகர்களின் பெயர்களெல்லாம் கட்டுரைகளில் வருகின்றனவே அவையெல்லாம்கூடக் கற்பனைதானா?

பெரிய கடவுளாகவே எண்ணி இல்லாத அட்டகாஸமெல்லாம் செய்கிறார்கள் சிலர். எஜமானரைப் பார்க்க வேண்டுமென்று ஒருவர் வந்தால் 200 எம படாக்கள் போன்ற 7 வேலையாட்களை ஜெயித்துப் பிறகு அங்கு சென்று வாசற்படியில் காத்துக் கிடக்கவேண்டும். ஏனெனில் எஜமானை அத்தனை எளிதில் பார்க்க முடியுமா: அவருக்கு ஏதோ ஓயாத வேலை இருப்பதாகப் பிறர் நினைக்கும் பொருட்டுச் சிலர் இந்த தந்திரம் செய்கிறார்கள்.

அவர்கள் உள்ளே செய்யும் வேலை என்ன! பேப்பர் படித்தல், மனைவி மக்களுடன் குலாவுதல், எப்போதோ சற்று வேலை செய்தல். இந்த அழகிற்கு நடக்கும் ஆடம்பரமோ கூற வியலாது. மணியடித்த பிறகு வாசற்படியண்டை நிற்கும் மனிதன் உள்ளே செல்ல வேண்டுமாம். வாய்முத்து சிந்துவதுபோல இரண்டு வார்த்தைகள் வருமாம். இத்தகைய அனுவசியமான ஜம்பமும் அழுத்தலும் பெரிய மனிதர்கள் என்ற பெயர் பெற்ற சிலரிடம் நடப்பது இக் காலத்தில் கண்காட்சி யாகிவிட்டது.

அங்ஙன மிருக்க மகா தியாகி என்றும், கலியுகக் கர்ணனென்றும் உலகமே கொண்டாடும் உத்தமரைப் பற்றிப் பிரமாதமாக கோவிந்தன் நினைத்திருப்பது வியப்பா? வீதியில் பசுமாட்டுக்குக் கீரை கொடுக்கும் உத்தமரை தோட்டக்காரரோ, மாட்டுக்காரரோ என்று எண்ணி வீட்டுக்காரரைத் தேட நினைத்து வீதி காப்போனை நோக்கி "ஐயா! உங்கள் எஜமானர் இருக்கிறாரா! அவரைப் பார்க்க வேண்டும்" என்றார்.


சில இடங்களில் எஜமானுக்கள் அதிக ஆடம்பர மில்லாது மத்திமமாக விருந்தாலும் அவர்களின் வேலையாட்கள் படுத்தும் பாடு போதும். எஜமானனைப் பார்ப்பதற்கு வரும் மனிதர்களுக்கு எஜமான் பேட்டி கொடுக்கத் தயாராக விருந்தும் இந்த சுற்றுப்பட்ட தேவதைகள் வழி மறிப்பான் தெய்வங்களாக ஏற்பட்டு விடுகின்றன. ஆள்களைத் தாராதரம் பார்த்து மெல்லக் கையை நீட்டுவது. இந்த

---

விடை:—"உலகமே மாயை! எல்லாம் அநித்யம்" என்ற தத்வத்தை எடுத்துக் காட்டுகின்றன போலும். அதை அறிய உமக்கு மூளை யில்லையா?

உயிருள்ள பிணங்களுக்கு வாய்க்கரிசி போட்டால்தான் எஜமானின் பேட்டி கிடைக்கும். இல்லையேல் கோவிந்தாதான்.

இந்த ரகஸியத்தை எஜமானுடன் தெரிவித்து விட்டாலோ அதோடு வந்தது அனர்த்தம். இவர்கள் எந்த காரியத்தைக் கோரி வந்தார்களோ அதில் ஒரு வண்டி மண்ணை விழும்படிச் செய்து விடுவார்கள். இந்த பயத்திற்காக அக்ஷதை போட்டுக்கொண்டே காரியத்தைப் பார்ப்பார்கள். இப்படி சில விடங்களில் உண்டு. நமது உத்தமரிடத்திலிருக்கும் ஆட்களுக்கு முதலிலிருந்தே தம்பதிகளின் ஆக்கினை என்னவெனில் "யார் வந்தாலும் வழி மறித்து அதட்டி வீண் அதிகாரம் செய்யாமல் நாங்கள் வீட்டிலிருந்தால் எங்களிடம் அழைத்து வரவேண்டியது. நாங்கள் இல்லையெனில் வருமளவும் அவர்களை மரியாதையாக உட்காரச் செய்திருந்து பிறகு எங்களிடம் அழைத்து வருவது. இதற்கு மீறுகிறவர்களை உடனே வெளியில் அனுப்பி விடுவோம்" என்பதே.




வினா:—என் சார்! அவரை அனேக சங்கீதக் கச்சேரிகளில் பார்த்திருக்கிறேன்; வெகு ரஸிகர் போலக் காணப்பட்டார். இப்பொழுது மேளக்காரர் வாசிக்கும் பைரவி ராகத்தை காம்போதியா என்று என்னைக் கேட்கிறீரே அதென்ன?

ஆதலால் அந்த வேலைக்காரன் வெகு வணக்கத்தோடு "ஐயா! இதோ இப்படி உட்காருங்கள். எஜமானர் அதோ பசுமாடுகளுக்கு அகத்திக்கீரை கொடுத்துக்கொண்டிருக்கிறார். கொடுத்துவிட்டு அவைகளைப் பிரதக்ஷணம் செய்து நமஸ்கரித்து விட்டு அங்கு நிற்கும் ஏழைக் குழந்தைகளுக்கு பாலைத் தாமே ஊற்றிவிட்டு வருவார். உட்காருங்கள்" என்றான்.

இதைக் கேட்ட வுடன் கோவிந்தனுக் குண்டான வியப்பிற்கு எல்லையே இல்லை. இதென்ன அதிசயம். இவரா சர்வோத்தமர்! இவரா பெரிய உத்யோகஸ்தர். த்யாக மூர்த்தி இவரா! என்ன வேடிக்கை. இத்தனை பெரிய மனிதன் இத்தனை சர்வசாதாரணமாக விருப்பது வியப்பிலும் வியப்பாக விருக்கிறதே! ஆஹா! கலியுகக் கர்ணன் என்று கூறும் வார்த்தை மிகவும் பொருத்தமாகவன்றோ இருக்கிறது. கர்வம், பெருமை என்பது அவர் மிதித்த மண்ணுக்கும் காண்ப தரிதுபோல விருக்கிறதே! என்ன குணம்! என்ன மனசு!

உத்தியோகமும் பாரியாக அமைந்து, செல்வமும் ஏராளமாக விருக்கும் பிரபுக்கள் இப்படியா இருப்பார்கள்? தலைகீழாகவன்றோ துள்ளி விழுந்துவிடுவார்கள். அவர்களுக்கு ஜம்பம், பெருமை, பட்டவர்த்தனம் இவைகளைத் தவிர வேறு நினைவேது. அடிக்கடி தமது பெயர்கள் பேப்பரில் வரவேண்டுமென்ற நோக்கத்துடன் சிலரைப் பூஷிப்பதும், சிலரை தூஷிப்பதும், ஏதேனும் ஒரு காரியத்தைச் செய்து தம் பெயர் பத்திரிகையில் உலாவவன்றோ செய்கிறார்கள். இன்று புறப்பாடு; நாளை வருகை. நாளை அங்கு அதைச் செய்வார். நேற்று இங்கு இதைத் திறந்து வைத்தார்; மூடி வைத்தார். தலைமை வகித்தார்;பேசினார்; தூங்கினார்; எழுந்தார்; மூச்சுவிட்டார்; நடந்தார்; என்ற சாதாரணமான வேலைகளுக்கெல் லாம் பத்திரிகைகளின் பக்கத்தை நிரப்பி மகிழும் புண்ணிய

---

விடை:—உம்முடைய ஞானத்தைச் சோதிப்பதற்கே அவ்வாறு செய்தார்போலும். அவர் ரஸிகராகக் காணப்பட்டார்: உம்மை ரஸிகரென்று நீரே தீர்மானித்து விட்டீர். பாடியதென்னவோ இரண்டு ராகங்களுமல்ல: சாவேரி.

வான்கள் நிறைந்த இக் காலத்தில் இவ்விதம் கர்வம் என்ற நாமதே யமெ யில்லாத மனிதரும், ஆயிரக்கணக்கில் தருமத்திற்கே செல விடும் பிரபுவும் இருக்கிறாரே! என்ன ஆச்சரியம்!'' என்று தனக் குள் கூறத்திறமற்ற வியப்புக் கடலில் மூழ்கிக்கிடந்தார்.

தனக்கு இரவு பகலாக உழைக்கும் வேலைக்காரர்களுக்கும் தன் கையினால் கூலி கொடுப்பது அவமானம் என்று கருதிச் சில பிரபுக்கள் அதற்குஒரு ஆளை ஏவுகிறார்கள். உத்தமரோ சர்வசகஜமாய் அகத்திக்கீரையைக் கொடுத்துவிட்டுப் பசுமாட்டை நமஸ்கரித்த பிறகு ஏற்கெனவே கல்கண்டு போட்டுக் காய்ச்சி ஆறவைத்திருக் கும் அப்பட்டப் பாலை குழந்தைகளுக்கு போதும் என்று திருப்தி யாகிச் சொல்லும் வரையில் ரங்கமணியம்மாளுடன் கூட ஊற்றி விட்டுப் பிறகு ஆளுக்கு கொஞ்சம் கொஞ்சம் பிஸ்கோத்தைக் கொடுத்துவிட்டு "குழந்தைகளா! போதுமா! போதுமா!" என்றுகேட்டு அவர்களை முழுமனத்துடன் அனுப்பிவிட்டு உள்ளே வந்தார்.

பொன்னிறமான மேனியும், கட்டுமத்தான தேகமும், காம்பீர மான தோற்றமும் அவருடைய உதார குணத்தைத் தெட்டென எடுத்துக் காட்டின. உத்தமர் வந்தவுடனே அவருக்கு கோவிந்தன் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து எழுந்து "இக்கலியில் இத்தகைய தியாக மூர்த்தி இருந்தும் தரிசிக்க இத்தனை நாள் பாக்கியம் செய்யா தொழிந்தது என் பாபமெனக் கருதுகிறேன்'' என்றார்.

தற்பெருமையும், புகழ்மொழியும் விரும்பாத உத்தமர் "அடா டாடா! இதெல்லாம் வேண்டாம். வேண்டாம். நம்மெல்லோரையும் கடவுள் படைத்து ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு கட்டளை யிட் டிருக்கிறான். அதின்படி நடக்கிறோம் நாம். இந்த பிரமாத காரி யத்திற்கு ஸ்துதி எதற்கு? நான் அதை விரும்ப மாட்டேன் என்ன சமாச்சாரம்? எங்கு வந்தீர்கள்? என்றால் ஆகவேண்டிய

---

சில நாட்டுப்புறத்து வாசிகள், சில ஆச்சரியமான பொருள்களைக் கண்டால் வாயைப் பிளக்கின்றார்கள். பட்டினத்து வாசிகளோ அவர்க ளது நாகரிகத்தைக் கண்டு வாய் பிளக்கின்றார்கள். வாய்ப்பிளப்பில் இரண் டுக்கும் மதிப்பு ஒன்றல்லவா!

உதவி ஏதேனும் உண்டோ?'' என்று வெகு வினயமாகக் கேட்டு உட்காரச் சொல்லி அவரும் அமர்ந்தார்.

கோவி:—தாங்கள் தங்கள் புகழ்ச்சியை வெறுப்பது தங்களுடைய பெருந் தன்மையைக் காட்டுகிறது. எனினும் நந்தவனத்திலுள்ள செடியில் புஷ்பித்துள்ள நறுமலர்களின் வாசனை குபீரென்று பரவாமலும் அதை மாந்தர் கொண்டாடி அனுபவித்து ஆநந்திக்காமலும் இருக்க முடியுமா? மா, பலா, கொய்யா முதலிய உயர்ந்த கனிவகைகளின் இனிப்பும், மணமும் பரிமளிக்காமல் ஒளிந்து போகுமா! அப்படியே தாங்கள் கற்பகத் தருவாகவிருந்து உலகின்கண் ணுள்ள ஏழைகளின் துயரத்தைத் தீர்ப்பதற்கே அவதாரம் செய்திருக்கிறீர்கள் என்பது உலகமே அறிந்த விஷயமல்லவா!

பிரபோ! இதோ இந்த எட்டு குழந்தைகளும் எனது சிநேகிதரான கதிர்வேலின் குழந்தைகள். (விவரங்களைக் கூறித் தன் சம்சார லக்ஷணத்தையும் உரைத்து) இதனால் இவர்களைத் தமது அனாதை யாசிரமத்தில் சேர்ப்பிக்க வேண்டி தங்கள் தயவுக்கு வந்திருக்கிறேன்''. என்று வினயமாகக் கூறினார்.

இதைக் கேட்ட உத்தமருக்கு மிக்க விசனமாகிவிட்டது. "ஐயோ பாவம்! குழந்தைகள் தங்கம்போல விருக்கின்றன. உம். விதிபோலும்.ஐயா! நான் ஒரு கடிதம் தருகிறேன்; அதைக் கொண்டு போய் மீனாட்சியம்மாளிடம் கொடுங்கள்; குழந்தைகளை வைத்துக் கொள்வார்கள்.'' என்று கூறி ஒரு கடிதம் கொடுத்தார். கோவிந்தன் மட்டற்ற மகிழ்ச்சியுடன் அதை வாங்கிக்கொண்டு அவருக்கு வந்தன மளித்துவிட்டுக் குழந்தைகளோடு நேரே தன் வீட்டிற்குச் சென்றார்.

ஜெயமணிக்கு மனத்தில் சற்று உறுதியும் ஸ்தரியமும் உண்டாகிவிட்டன. கோவிந்தன் இவர்களுக்குச் சமையல் செய்து சாப்

---

சிக்கன குணமும் சந்தேகமும் நிறைந்த மனிதர்கள் எந்த காரியத்தைச் செய்யப் புகுந்தாலும் சந்தேகமே! தையல்காரனிடம் துணியைக் கொடுத்துவிட்ட பிறகு துணியைத் திருடிவிடுவானோ என்ற சந்தேகம்; வேலைக்காரர்களை வீட்டில் காவல் வைத்துவிட்டுப் போக சந்தேகம்;

பாடு போட்டுப் பின் இவர்களுடைய துணிகளை எல்லாம் எடுத்து மூட்டை கட்டினர். மூட்டை கட்டுவதைப் பார்த்துகொண்டிருந்த மற்ற குழந்தைகள், "மாமா! ஏன் மூட்டெ கட்டரே? ஊருக்குப் போப்போறியா! எங்களை உட்டுட்டா போப்பேரே: எங்களையும் அழச்சிண்டுதான் போகணும். என்ன மாமா? ஒன்னெ விடமாட்டோம். ஊம்; ஊம். நாங்களும் வருவோம்." என்று கேட்டுச் சிணுங்க வாரம்பித்தார்கள்.

இது கேட்ட கோவிந்தனுக்கு மனத்திற்குள் கதிர்வேலின் குடும்பம் அடைந்துவிட்ட வயிற்றெரிச்சலை எண்ணியும், குழந்தைகள் சொல்வதைக் கேட்டும் துக்கம் வருகிறது. அதை யடக்கிக் கொண்டு "குழந்தைகாள்! உங்களை விட்டு விட்டுப் போகமாட்டேன். உங்களையும் கூடத் தான் அழைத்துப் போகப் போகிறேன். அழாதீர்கள். அங்கு ஒரு வீட்டில் கல்யாணம் அதற்காகப் போகலாமா? அந்த கல்யாண வீட்டிலேயே நீங்களிருந்தால் நிறைய பக்ஷணம், பழம், எல்லாம் கொடுப்பார்கள். நிறைய குழந்தைகள் இருக்கின்றன. அவர்களோடு விளையாடலாம். சினிமா, ட்ராமா, பீச்சு முதலிய இடங்களுக்குப் போகலாம். அங்கேயே இருக்கிறீர்களா!" என்று தந்திரமாய்க் கேட்டார்.

குழந்தைகளுக்கு வேறு என்ன வேண்டும்? "மாமா! அங்கே அடிக்கமாட்டாளே. ஒங்காத்து மாமி மாதிரி திட்டமாட்டாளே? குட்டமாட்டாளே?" என்று கேட்டன. கோவிந்தனுக்கு எப்படி இருக்கும்? "ஒன்றும் செய்யமாட்டார்கள்; சமத்தாக விருங்கள்" என்று சமாதான வார்த்தைகளை இங்கேயே கூறிவிட்டு அன்று மாலையில் ஓர் வண்டி யமர்த்தி அதில் இவர்களை ஏற்றிக்கொண்டு நேரே ஆசிரமத்தை யடைந்தார். கோவிந்தன் கண்கள் தண்ணீரைக் கக்கிக் கொண்டே இருக்கின்றன.

---

உத்யோக சாலைக்குச் சென்றிருக்கையில் வீட்டிலுள்ள மனைவிமேல் சந்தேகம். இரவில் படுக்கையில், திருடர்கள் எங்கு வந்துவிடுகிறார்களோ என்கிற சந்தேகமும் பயமும். இப்படி சந்தேகக் கயிற்றால் கட்டுண்டவர்களுக்கு க்ஷண நேரமேனும் நிம்மதி புண்டா?

அன்றும் கண்காட்சி இருப்பதால் கூட்டம் நிறைந்து கிடக்கின்றது. கோவிந்தன் தலைவி இருப்பிடம் சென்று கண்ணீர் பெருக வணங்கி "தாயே! இதோ கடிதம் உத்தமர் கொடுத்தார். இந்த நாதியற்ற குழந்தைகளை உங்களிடம் ஒப்புவித்து விட்டேன். இனி இவர்களுக்கு நீங்கள்தான் கதி. நீங்கள்தான் சகலமும்." என்று வருந்தினர்.

மீனு:—ஐயா! நானுவது நீயாவது, எல்லோரையும் நாமா படைத்தோம். நாமா அவர்களை நடத்துகிறோம். நாமா அவர்களைக் கொண்டு போகிறோம். ஒன்றுமில்லை. எல்லாவற்றிற்கும் கர்த்தாவாகிய கருணாநிதியின் மீது பாரத்தைப் போட்டுவிடுங்கள். அவனன்றி ஓர் அணுவாவது அசையுமா! எல்லாம் அவனருள்படி நடக்கும். கவலை வேண்டாம்.

கோவிந்:—தாயே! உங்களுடைய வைராக்கிய மதி என்னை வியக்கச் செய்கிறதே யன்றி எனக்கந்த திடசித்தம் உதிக்கவில்லையே! என்ன செய்வேன்? குழந்தைகளை வைத்துப் போஷிக்க சக்தியில்லை, திக்கில்லை; பிரியவும் மனமில்லை. என்ன செய்வது? தாங்கள் கூறுவதுபோல ஈசன் இருக்கிறான் என்ற நம்பிக்கைதான் பெரிய ஆறுதல், துணை, சகலமுமாகும். "ஜெயா! இதோ இந்த அம்மாள்தான் இனி உங்களுக்குத் தாயார். அதோ அவர்களெல்லாம் சகோதரிகள் என்று எண்ணி இவர்களிடம் பய பக்தி விசுவாசத்துடன் இருக்க வேண்டும். அழாதே யம்மா! குழந்தைகளின் முகத்தைப் பார்" என்று கூறினர்.

இதற்குள் தலைவி ஜெயாவை அழைத்து "அம்மா! அழாதே! அதோ பார் அங்கு நிற்கும் எல்லோரும் உன்னைப் போன்ற பரதேசிகள்தான். அவர்களும் வரும்போது இப்படித்தான் கலங்கினர்கள்.

---

பக்ஷணம் செய்வதற்கு முன் அதைச் செய்யவேண்டுமென்ற ஆசை. பணச் செலவைப் பார்த்தாலோ கொஞ்சம் செய்தால் போதுமென்ற எண்ணம். செய்த பிறகோ எல்லாருக்கும் கொடுக்கவேண்டுமென்ற ஆசை. சாப்பிட ஆரம்பித்தவுடன் தனக்கே போதுமான அளவு இல்லாமற் போய்விடுகின்றது.

இப்போது பாரு; இதை விட்டுப் போகமாட்டேனென்கிறார்கள். அப்படித்தான் உனக்குமாகும். அவர்களுடன் சினேகமாகி விட்டால் சரியாகி விடும்''. என்று கூறித் தட்டிக் கொடுத்தாள். குழந்தைகளையும் அழைத்துத் தட்டினாள். கோவிந்தனை நோக்கி "ஐயா! நீங்களேன் விசனிக்க வேண்டும்? அவர்களின் பிறவியில் இவ்விதம் இருக்கிறது போதும். நீங்கள் அடிக்கடி வந்து குழந்தைகளைப் பார்த்துச் செல்லுங்கள்.'' என்றாள்.

கோவிந்தன் அதற்குமேல் என்ன சொல்வார் பாவம்! ஒவ்வொரு குழந்தையையும் தனித் தனியாகக் கட்டித் தழுவி முத்தமிட்டு அவர்கள் கையில் ஆளுக்கு ஒரு ரூபாயும் பெப்பர்மின்டு, பிஸ்கோத்து முதலிய தின்பண்டங்களைக் கொடுத்துவிட்டு "குழந்தைகளா! நான் சென்று வருகிறேன். சமத்தாக விருங்கள்'' என்று அவர் கூறும்போது அவரையு மறியாது துக்கம் வந்து விட்டது. குழந்தைகளும் "மாமா! எங்கே போப்பேரே? நீயும் இங்கேயே இரு. போகக் கூடாது.'' என்று காலைக் கட்டிக் கொண்டன.

ஜெயமணிக்கும் விசனம் பொங்கிவிட்ட தெனினும் அதை உள்ளடக்கிக் கொண்டு மற்ற குழந்தைகளை எல்லாம் சமாதானம் செய்தவாறு "மாமா, நமக்கு சொக்கா, துணி, பொம்மை எல்லாம் வாங்கி வருவதற்காக போகிறார்; வாங்கிக் கொண்டு வருவார். அழாதீர்கள்.'' என்று தேற்றினாள்.

பிறகு கோவிந்தன் தலைவியிடம் சொல்லிக்கொண்டு புறப்பட்டார். மனம் தத்தளிக்கிறது. கால்கள் பின்னுக்கே இழுக்கின்றன. குழந்தைகளும் "மாமா! சீக்கிரம் வாங்கிண்டு வரயா?'' என்று கோவிந்தன் தலை மறையும் வரையில் கேட்டுக் கொண்டே பார்த்து நின்றார்கள். கோவிந்தனும் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே கண்ணைத் துடைத்தவாறு அபாரமான விசனத்துடன் சென்றார்.

குழந்தைகளும் அவருடைய தலை மறையும் வரையில் பார்த்துக் கொண்டிருந்து விட்டு "அக்கா! ஜெயக்கா! மாமா அப்புறம்

---

புருஷன்:—பூகம்ப நிதிக்காக வசூலிக்க வந்திருக்கிறார்கள். கையில் பணமில்லை: உனது மோதிரத்தைக் கழற்றிக் கொடு.

வந்து விடுவாள்ளோன்னு! சொக்கா வாங்கிண்டு வருவாள்ளோன்னோ?'' என்று தொண தொணப்பி விட்டார்கள். அவர்களுக்குச் சமாதானங் கூறுவதுதான் எப்படி? அவளுக்கும் விசனம் பொங்குகிறது. இடமும் மனிதரும் யாவும் புதிது. பரதேசிபோல இத்தனை குழந்தைகளுடன் தான் நிற்கும் கோரக் காட்சி அவள் மனத்தைத் தாக்கியது. கண்ணீர் தானாக வழிந்துகொண்டே இருக்கிறது. குழந்தைகளை வைத்துக்கொண்டு ஒருபுறமாக உட்கார்ந்துவிட்டாள்.

பொழுது ஏற ஏற ஜெயமணியின் வேதனையைக் கூறத் திறமன்று. "மாமா எப்பொ வருவா?ஏன் இன்னும் வரல்லெ?'' என்று குழந்தைகள் தொணப்புகின்றன. இதற்குள் தலைவி எல்லாக் குழந்தைகளையும் சமாதானப் படுத்திவிட்டு வழக்கம்போல நடக்கும் பிரார்த்தனைக்கு இவர்களை அழைத்துச் சென்றாள். கண் காட்சியும் முடிந்துவிட்டதால் எல்லோருமாகப் பிரார்த்தனை செய்ய வாரம்பித்தார்கள்.

இவ்விதமான பஜனைகளை அக் குழந்தைகள் பார்த்ததே இல்லையாதலால் இது ஓர் வேடிக்கையாகத்தோன்றியது. அதையே கவனித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார்கள். முதலில் தலைவி கடவுளின் படங்களுக்கு கர்ப்பூர ஹாரத்தி செய்து பழங்களை நிவேதனம் செய்துவிட்டு,

ஹேகோபாலக! ஹேக்ருபா ஜலநிதே! ஹே ஸிந்து கந்யாபதே!
ஹேகம்ஸாந்தக! ஹே கஜேந்த்ர கருணா பாரீண! ஹே மாதவ!
ஹே ராமாநுஜ! ஹே ஜகத்ரயகுரோ! ஹே புண்டரீகாக்ஷ! மாம்
ஹே கோபீ ஜநநாத! பாலயபரம் ஜாநாமி ந த்வாம் விநா.
பக்தாபாய புஜங்க காருடமணிஸ் த்ரைலோக்ய ரக்ஷாமணி:
கோபீலோசந சாதகாம் புதமணிஸ் ஸௌந்தர்யமுத் ராமணி:
ய: காந்தாமணி ருக்மிணீ கநகுச த்வந்த்வைக பூஷாமணி:
ச்ரேயோ தேவசிகாமணிர் திசது நோ கோபால சூடாமணி:

---

மனைவி:—(ஆத்திரத்தோடு) குதிரைப் பந்தயம் இம்மாதிரியும் சற்றுக் கொடுக்கிறதா? போதும் போதும்; குதிரைப் பந்தயத்துக்குக்கொட்டி அழுததெல்லாம். எங்கே வசூலிக்க வந்தவர்கள்? நானே நேரில் கொடுக்கிறேன். இதுவாவது தர்ம விஷயத்திற்குப் போகட்டும்.

என்ற முகுந்தமாலை ச்லோகங்களை வெகு பக்தியுடன் உருக்க மாகப் பாடினாள். பிறகு 'ரகுபதி ராகவ ராஜாராம் பதீத பாவன சீதாராம்'. என்ற பாடலை ஆசிரமத்து மாணவிகள் எல்லோரும் ஒன்றுகூடிப் பாடி பஜனை செய்தார்கள். தினம் இரு மாணவிகள் தனித்துப் பாடும் வழக்கம்போல அன்று யாருடைய முறையோ அந்த பெண்கள் வெகு ஆனந்தமாகப் பாடினார்கள்.

பிறகு பிரார்த்தனையும் முடிந்தது. ஒவ்வொருவரும் நமஸ்காரம் செய்துவிட்டு பூஜா மஹாலை விட்டு வெளியே வந்தார்கள். இதற்குள் போஜனத்திற்கு அழைக்கும் மணியடித்ததும் எல்லோரும் தம்தம் தட்டுகளையும், டம்ளர்களையும் எடுத்துக்கொண்டு அமர்ந்தார்கள். புதிதாக வந்த இவர்களைத் தலைவி தன்னருகில் வைத்துக்கொண்டு சாப்பிடச் செய்தாள். குழந்தைகளை எப்படியும் அழாமல் பார்த்துக் கொள்ளவேண்டும் என்று தலைவி தானே கவனித்து வந்தாள்.

விவகாரம் இன்னதென்று தெரியாத இக் குழந்தைகள் இரவெல்லாம் "மாமா எங்கே? மாமா எங்கே? இன்னும் வரவில்லையே?" என்று கத்தி யழுது ஹதம் செய்துவிட்டன. ஜெயமணியும் இரவெல்லாம் தூங்கவில்லை. அவளும் தன் திக்கற்ற நிலைமையையும் குழந்தைகளின் பரிதாபகரத்தையும் கண்டு சகிக்காமல் அழுது அழுது முகம் வீங்கிவிட்டது.

இரண்டு மூன்று நாட்கள் ஆனதும் சற்று அழுகை ஒய்ந்து அங்குள்ள மற்ற குழந்தைகளுடன் சிநேகம் செய்துகொண்டு விளையாட்டில் மாறினார்கள். ஜெயமணியும் ஆசிரமத்தின் திட்டங்களையும் பழக்கங்களையும் நன்கு தெரிந்துகொண்டாள். அவர்களுடன் கூடிச் சிநேகமாகத் தானும் வேலை செய்யவும் படிக்கவும் தலைவி இடத்தில் பக்தியாக விருக்கவும் ஆரம்பித்தாள்.

இவர்களை இங்கு விட்டுச் சென்ற கோவிந்தன் கன்றைப்

---

வினா:—வீதியில் செல்கையில் இந்த ஒட்டலிலிருந்து நெய் வாசனை சமகமவென்று மூக்கைத் துளைக்கின்றதே. இங்கு வந்து பக்ஷணம் வாங்கி சாப்பிடுகையில் எண்ணெயின் வேகம் குடலைக் குமட்டுகின்றதே!

பிரிந்த தாய்ப் பசுவைப் போலக் கதறியவாறு நேரே கடற்கரைக்குச் சென்றார். அவருக்கு சொந்தத்தில் ஒரு குழந்தை யில்லாவிடினும் இக் குழந்தைகளிடத்தில் அபாரமான பாசம் திடீரென்று உதித்து விட்டதால் அவர் மனம் பதைக்கிறது. "ஆ! கதிர்வேலு! உன் குடும்பத்தின் அலங்கோலம் கண்டு சகிக்க முடியவில்லையே! எனது ப்ராண சினேகிதனாகிய நீ மறைந்துவிடவும், உன் கஷ்டங்களைக் கண்டு நான் கண்ணீர் உதிர்க்கவும் விதி முடிந்த வேடிக்கைதான் என்னே! ஒரு குடும்பத்திற்கு முக்கியமான தலைவனும் தலைவியும் இல்லாவிடின் குடும்பமே சிதறுண்டு பாழாகி விடுகின்றது. தலைவனும் தலைவியும் இருந்தும் என் குடும்பத்தின் கோரமோ, கண்ராவியோ கூறத் திறமற்றிருக்கிறது. என்ன மாய உலகம்!" என்று கண் கலங்கி விசனித்தவாறு கடலின் ஆரவாரக் கொந்தளிப்பைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அப்போது சற்று தூரத்தில் மணல் மீது இருவர் வெகு கும்மாள மடித்துக்கொண்டு பேசி நகைத்த ஓசை இவர் காதில் பட்டது. அதைக் கூர்ந்து கவனித்தார். அக் குரல் தன் மனைவியின் குரல் என்பது இவருக்குத் தெரிந்ததும் திடுக்கிட்டார். "என்ன! ஓலகாம்பாளா இங்கு பேசுகிறாள்? யாருடன் பேசி மகிழ்ந்து இவ்விதம் கூச்சலிடுகிறாள்?" என்று எண்ணித் தன் தலைமீது துணியை முக்காடிட்டுக்கொண்டு மெல்ல நகர்ந்தவாறு பின் புறமாகச் சற்று அருகில் சென்று மணலில் படுத்துக் கொண்டார். தன் மனைவி யாருடன் இவ்விதம் என்ன பேசுகிறாள் என்பதை அறியப் பேராவல் கொண்டார்.

ஓலகாம்பா:—நீ உண்மையில் பார்த்தாயா: அது நிச்சயந்தானா?

அவன்:—உண்மையில் நான் கண்ணாரக் கண்டேன். அந்த வீட்டிற்கு உன் புருஷன் சென்று அந்த உத்தமருடன் பேசிக்

---

விடை:—அட அசடே! இது தெரியாதா? வீதியில் போவோர் வருவோர் எல்லாம் இந்த வாசனையைக் கண்டு மயங்கி இங்கு சாப்பிட வருவதற்காக ஒரு சிறிய பாத்திரத்தில் வெண்ணெயைக் காய்ச்சிக்கொண்டிருப்பார்கள்; பக்ஷணங்கள் என்னவோ மாமூல்.........வியாபார தந்திரத்தில் இதுவும் ஒன்று.

கொண்டிருந்தார். நான் பிள்ளைகளுக்குப் பால் வாங்கும் பொருட்டுச் செல்கையில் கண்ணால் கண்டேன். அதனால்தான் கூறுகிறேன்

ஒலகாம்பா.—ஓகோ! அப்படியானு நீ என்ன செய்யவேண்டு மென்கிறுய்? உனக்கு ஆகவேண்டிய காரியம் என்ன?

அவன்:—அதைக் கூறமாட்டேனு! உனக்கு நான் சொல்லிய தொகையைக் கட்டாயம் செலுத்திவிடுவேன் பயப்படாதே! எனக்கு ஆகவேண்டிய காரியத்தை வெகு ரகஸியமாய் முடித்துக் கொடுக்க வேண்டும். வெளியில் தெரிந்தால் மோசந்தான். அதாவது உன் புருஷனை நீ பகைத்துக் கொள்ளக்கூடாது. அவனிடம் முன்னைய விட ஆயிரம் பங்கு அதிகரித்த மதிப்பும், பிரேமையும் காட்டி நடிக்கவேண்டும். அவர் உத்தமரை எப்போது சினேகம் செய்து கொண்டாரோ அது நாளடைவில் விருத்தியாகும். அந்த மார்க்கத்தை நீயும் பின்பற்றி அவர்கள் வீட்டில் சினேகம் செய்துகொள்ள முயற்சி செய்து எப்படியாவது சினேகம் செய்துகொள். அதன் பிறகுதான் முக்கியமான வேலை இருக்கிறது. நான் சில கடிதங்கள், சாமான்கள் உன்னிடம் கொடுக்கிறேன். அவற்றை எப்படியாவது அந்த வீட்டில் முக்கியமான இடத்தில் ஒருவரு மறியாதபடி வைத்துவிட வேண்டும். அதன் பிறகு நான் பார்த்துக் கொள் கிறேன். இவ்வளவுதான் நீ செய்யவேண்டிய உதவி.

ஒலகாம்பா:—அது என்ன சாமான், என்ன கடிதம் கூற முடியாதா?

அவன்:—அதை உன்னிடம் எதற்குக் கூறுவது. அதற்கும் உனக்கும் சம்மந்தமே இல்லை. அதைச் செய்யவேண்டிய வரையில் தான் உனக்கு வேலை; தெரிந்ததா! இந்தா 50 ரூபாய் நோட்டு. இதைப் போல இன்னும் 10 நோட்டுக்கள் உன்னைத் தேடி வரும். ஜாக்ரதை—என்றுன்.

---

ஒருவன் ஏதாவது ஒரு புதிய தொழிலை ஆரம்பித்து அதில் விருத்திக்கு வருவதாகத் தோன்றினுல் அதே தொழிலை மற்றும் சிலரும் ஆரம்பித்துத் தாமும் பயன் பெருமல் முதல்வனது தொழிலையும் ஓங்கச் செய்யாமல் குட்டிச்சுவர் செய்து விடுகின்றுர்கள். தாம் வேருென்றைக் கண்டு

நோட்டைப் பார்த்த உடனே ஓலகாம்பாளின் சந்தோஷம் கரை கடந்து விட்டது. ரூபாயை மடியில் வைத்துக் கொண்டாள் "ஆகா! அப்படியே செய்து முடிக்கிறேன். கொஞ்சமும் தவற மாட்டேன். நான் இன்று இரவே வீட்டிற்குச் சென்றதும் என்னுடைய நாத்தனாரை அழைத்துக்கொண்டு அந்த வீட்டிற்குப் போகிறேன். அந்த அசடு ஊரார் குழந்தைகளை எல்லாம் வைத்துக் கொண்டு மாரை யடிக்கின்றது.

இந்த காரியம் ஆக வேண்டுவதை உத்தேசித்து நான் ஓர் வேலை செய்கிறேன். அந்த எட்டு சனியன்களையும் நானே காப்பாற்றுகிறேன்; வேலை செய்கிறேன். நம்முடைய வீட்டிற்கே அழைத்துக்கொண்டு வந்து விடுங்கள். நான் தெரியாமல் செய்து விட்ட பிழைகளை எல்லாம் மன்னிக்க வேண்டும். என்று அழுது புரண்டு, காலில் விழுந்து, வேண்டி, நடித்து வீட்டிற்கு அழைத்துச் செல்கிறேன். என் புருஷனின் உச்சி குளிரும்படிச் செய்து விடுகிறேன். அதன்பிறகு உன் கோரிக்கையை நிறைவேற்றி விடுகிறேன். சரிதானே!'' என்றாள்.

இதைக் கேட்ட அம் மனிதன் வெகு சந்தோஷத்துடன் "சபாஷ் அக்கா! இதில் மட்டும் நீ தவறி விட்டால் காரியம் கெட்டு விட்டது என்றுதான் தீர்மானம். ஆகையால் ஜாக்ரதை" என்று தட்டிக் கொடுத்தான். உடனே இருவரும் எழுந்து சுற்று முற்றும் பார்த்துவிட்டு நடக்க வாரம்பித்தார்கள். இவர்கள் உட்கார்ந்திருந்த இடத்திற்குச் சற்று தூரத்தில் கோவிந்தன் படுத்திருந்ததைக் கண்ட ஓலகாம்பாள் அவன் இன்னாரென்று தெரியாவிடினும் "யாரோ படுத்திருக்கிறானே இவன் நம்முடைய சம்பாஷணையைக் கவனித்திருப்பானோ?'' என்று சற்று பயந்தவாறு கேட்டாள்.

அதற்கு அம் மனிதன் அலக்ஷியமாக "ஆமாம். இவன் யாரோ சோம்பேறி போலத் தோன்றுகிறது. முட்டாக்கும் அவனும் படுத்திருக்கிற அழகைப் பாரு. இவன் காதில் கேட்டிருக்காது. அப்

பிடித்து அம்முறையில் விருத்திக்கு வரலாமே யென்ற ஞானபுத்தியோ கிடையாது. இப்படியே ஒவ்வொரு தொழிலிலும் ஒவ்வொருவர் நடத்தையிலும் இருந்தால் நம் தேசம் முன்னேற்ற மடைவது எப்படி?

படி இருப்பினும் இவனுக்கு என்ன அர்த்தமாகி இருக்கும். யாரோ சோம்பேறித் தடியன் தூங்குகிருன்.'' என்று மண்ணை அள்ளி கோவிந்தன்மேல் கொட்டினன்.

இங்கு நடந்த சகல சம்பாஷணைகளையும் கேட்டுக் கொண்டிருந்த கோவிந்தனின் மனம் என்ன விதமிருக்கும்? தன் மனைவியின் இத்தகைய விபரீத சகவாஸத்தின் போக்கைக் கண்டு வயிறெரிந்தான். மகா உத்தமராயும், அவதார புருஷனயும் விளங்கும் உத்தமருக்கு ஏதோ தீங்கு செய்வதற்கு இவர்கள் சூட்சி செய்யப் போவதாகவன்றே தோன்றுகிறது! சீச்சீ! அடி கொடிய சர்ப்பமே! விஷமப் பேயே! உன் பணத்தாசை பாழாய்ப் போக. அதற்காக எத்தகைய தீய தொழிலையும் மேற்கொள்ள உன் மனம் இசைந்து விட்டதே! நாசகாலீ! உம். யாரோ சோம்பேறித் தடியன் படுத்திருப்பதாகவன்றே தீர்மானித்தீர்கள் அப்படியே இருக்கட்டும். சோம்பேறித் தடியனை போக்கிரி என்ன செய்வானே அதேபோல நானும் செய்து காட்டுகிறேன். நானே ஒரு உண்மையான புத்தி யுடைய, தெய்வ நம்பிக்கை யுடைய, சத்திய நெறி யுடைய, சினேக வாஞ்சை யுடைய, த்யாக புத்தி யுடைய மனிதனுக விருப்பின்—சுத்த ஹிருதயத்துடன் கூடியவனுக விருப்பின்—ஒரு கை பார்த்துக் கொள்கிறேன். என்னுயிரைக் கொடுத்தேனும் என் சினேகிதனின் குழந்தைகளைக் காப்பதையும், உத்தமருக்கு இவர்கள் செய்ய விருந்த இடரைத் தீர்ப்பதையும் கங்கணங் கட்டிக் கொண்டு செய்கிறேன். இது சத்தியம்.'' என்று தனக்குள்ளேயே ஆத்திரத்துடன் சபதம் செய்து கொண்டார்.

மணலை யள்ளி மேலே போட்டதைக் கவனியாது தூங்குவது போல அபிநயித்தார். இதைக் கண்ட அவர்கள் "பயம் வேண்டாம்; அந்த சோம்பேறி தூங்குகிறது. வா; போகலாம்'' என்று கிளம்பினர்கள். அவர்கள் கொஞ்சதூரம் சென்ற பிறகு கோவிந்தன் முக்காடிட்டபடியே அவர்களைப் பின்தொடர்ந்து செல்லவாரம்பித்தான். சிறிது நேரங் கழித்து கோவிந்தன் அகஸ்மாத்தாகத் திரும்பிப் பார்த்தபொழுது தன்னைப் பின் தொடர்ந்து யாரோ பதுங்கிப் பதுங்கி வருவதையறிந்து கோவிந்தனே திடுக்கிட்டான். இதென்ன நிழலுக்குள் நிழலாக நம்மை யாரோ தொடர்வதுபோலிருக்கிறதே!'' என்று கலவரமுண்டாகிவிட்டது. அப்படியே பிரமித்து ஸ்தம்பித்து விட்டான்.

---

ரயிலில் ஒரு வண்டியிலிருந்து நான்கு மனிதர்கள் இறங்கினல் அதிலேயே 40 மனிதர்கள் ஏறுவதற்குப் போட்டியிடுகின்றனர்கள். அடுத்த வண்டிகளில் இடம் காலியா யிருக்கிறதா பார்ப்போம் என்கிற நிதான புத்தியே கிடையாது.

# 'சுதேசமித்திரன்' மதிப்புரை

## ( 2—3—1934. )

## பொறுமையின் பொக்கிஷம்
## அல்லது படாடோபத்தின் பரிபவம்.

தமிழ் நாவல் ஆசிரிய உலகில் ஸ்ரீமதி கோதைநாயகி அம்மாள் முக்கிய ஸ்தானத்தைப் பெற்று விட்டதால் அவருடைய நாவல்களுக்குத் தமிழ்நாட்டில் விசேஷ மதிப்பு இருந்துவருகிறது. ஏனைய சில ஆசிரியர்களுக்கும் அவருக்கும் இருந்து வரும் ஒரு முக்கிய வித்தியாசமும் இதற்குப் பெரிதும் காரணம். அவர்களோ படிக்கிறவரையில் இன்பமூட்டுவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டிருக்கின்றனர். ஆனால் ஸ்ரீமதி கோதைநாயகி அம்மாளோவெனில் ஒவ்வொரு நாவல் மூலமாகவும் படிப்போருடைய மனத்தில் சில உயரிய குணங்கள் பதியும்படிச் செய்வதிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்துவருகிறார்கள். இதனால் நாவல் உலகிற்கு அவர் செய்து வரும் உபகாரமானது சாசுவதமான பலனை அளிக்கக்கூடியதாக இருக்கிறது.

நம் முன்னிருக்கும் மகுடத்தில் கண்ட பெருடன் கூடிய நாவலும் அவ்விதம் நீதிமார்க்கத்தை படிப்போர் மனத்தில் பசுமரத்தாணி போல் பதியவைப்பதாக இருக்கிறது. பணத்தாசை மிகுந்துள்ள இவ்வுலகில் அதனால் சாதித்துக்கொள்ளமுடியாத தொன்றில்லையென்ற தப்பெண்ணம் பலர் மனதிலும் தவருக வேரூன்றிப்போயிருக்கிறது. இதனால் பொருளீட்டும் ஆசையில் பலரும் நெறிமுறைகளையும் அலக்ஷியம் செய்துவிடுகின்றனர். இக் கதாநாயகனாகிய மணியனும் அந்தப் பொருளாசை கொண்டு பேயாய்ப் பறக்கிறான். அந்த நோக்கமும் அவனுக்குக் கைகூடுகிறது. அதனால் அவன் சிறப்புற்றிருந்த காலத்தில் தாரித்திரிய தசையிலுள்ள அவனுடைய அன்னை அவனைப் பார்த்துவிட்டுப் போகவந்தபோது அப்பொழுது அங்கு குழுமியிருந்த அவனுடையதைப்போன்ற குணத்தினர் முன்னிலையில் அவளைத் தாயென்று ஏற்கவும் அவன் இஷ்டப்படவில்லை. இம்மட்டோ? அப்பொழுது பருகிக்கொண்டிருந்த மதுப் புட்டி யொன்றையும் அவன் தலை தெரியாமல் தாயின்மீதெறிந்து அவளைக் காயப்படுத்திவிடுகிறான். அப்பொழுது "பணத்

ms211 A122 Jw
N54114



திமிர் என்றும் நிலேக்காது: அப்படி நிலேத்தாலும் பணத்தினுல் நீ பெறமுடியாத அரிய பொருள் இருப்பதை நீ சீக்கிரமே அறிவாய்'' என்று அவன் தாய், அவன் செய்த துர்க்கிருத்தியத்தினுல் ஏற்பட்ட வருத்தத்தையும் பொருட்படுத்தாமல் இடித்துக் காட்டிய பொன் மொழியில் பொதிந்து கிடக்கும் உண்மையை அவன் அறிந்து கொள்ளவில்லே. பின்னெரு சமயத்தில் அவனுடைய மனேவி "பணத்தினுல் சில அரிய பொருள்களேச் சம்பாதிக்க முடியாது'' என்று உயிர் பிரியும் தறுவாயில் நினேப்பூட்டியதும் அவன் மனதில் உறைக்கவில்லே. கடைசியாக அவன் மறுபடியும் வேருெருத்தியைக் காதலித்து அவளே அடைய விரும்பியபோது அவள் அதே விஷயத்தை இடித்துக் காட்டியபோது அவன் மனம் திரும்பியதாஞலும் அது காலப்பிற்பாடாகிவிட்டது. தான் செய்துவிட்ட அபசாரங்களுக்காக மன்னிப்பு கேட்டுக்கொள்ள அவன் பெற்ருேரிடமும் சகோதரனிடமும் சென்றபோது அவர்களுடைய நிலேமையே மாறியிருந்தது. பொறுமைக் களஞ்சியமாகிய அவனுடைய சகோதரனும், பத்தினியும் அவன் பணத்தைத் திரணமாக மதித்துவிட்டார்கள். இந்தக் கதையைப் படிக்கும் எவருக்கும் பணத்தினுல் எதையும் சாதித்துக்கொண்டுவிடலாமென்ற எண்ணம் அறவே மறைவதற்கு இடமேற்படுமென்பதில் சிறிதும் சந்தேகமில்லே.

இத்தகைய உயரிய நீதிகளேப் போதிக்கும் நாவல்களே வெளியிட்டுவரும் ஸ்ரீமதி கோதைநாயகி அம்மாளுக்குத் தமிழ்நாடு அதிகம் கடமைப்பட்டிருக்கிறது. தமிழ் மக்கள் மேன்மேலும், ஆசிரியைக்கு ஆதரவும், ஊக்கமும் அளித்து வருவதன் மூலமாக மேற்கொண்டு இதுபோன்ற பல நாவல்களே வெளியிடுவதற்கு அவருக்கு உத்ஸாகம் ஏற்படும்படிச் செய்வார்களென்று நம்புகிருேம்.

182964

இந்த அருமையான நாவலின் விலே அணு. 8.

நமது சந்தா நேயர்களுக்கு விலே அணு. 6.

"ஜகன்மோகினி'' ஆபீஸ்., திருவல்லிக்கேணி.

# பாரதியார் நூல்கள்

### கதைக் கொத்து

இதில் பாரதியார் தன் சொந்த அநுபவங்கள், அபிப்பிராயங்கள், கனவுகள், இன்னும் நமது மடமை, மூட பக்தி, ஸ்திரீகளின் நிலைமை இவை போன்ற ஸமுதாய வாழ்வின் குறைகளை நாம் அறவே ஒழிக்கு முறையை எடுத்துரைக்கிறார். எளிய தமிழ் நடையில் எழுதப்பட்டது. அணா 0 8 0

### பகவத் கீதை

நாகர அக்ஷரத்தில் மூலமும், பாரதியாரின் அழகிய தமிழ் உரையும், விரிவான முன்முகமும் அடங்கியது. அணா 0 8 0

### வசனங்கள்

இதில் ஞானரதம், சந்திரிகையின் கதை, நவதந்திரம், பதஞ்சலி யோக ஸூத்திரம், வேத ரிஷிகளின் கவிதை, தராசு முதலியன அடங்கியுள்ளன. ரூபா. 2 0 0

### கவிதைகள்

தேசிய கீதங்கள், தோத்திரப் பாடல்கள், வேதாந்தப் பாடல்கள், விநாயகர் நான்மணி மாலை, கண்ணன் பாட்டு, புதிய ஆத்திசூடி, பாப்பா பாட்டு, முரசு, பாரதி அறுபத்தாறு, காட்சி, குயில், பாஞ்சாலி சபதம் முதலியன சேர்ந்தன. ரூபா 2 8 0

# சங்கு நூல்கள்

### மகாத்மா காந்தி எழுதிய

| | ரூ. | அ |
|---|---|---|
| சத்திய சோதனை I | 1 | 8 |
| ஷை II | 2 | 0 |
| இல்லறமும் பிரம்மசரியமும் | 0 | 6 |
| அநாசக்தியோகம் | 0 | 4 |
| ஆரோக்கிய வழி | 0 | 4 |
| நீதி தருமம் | 0 | 2 |
| கீதாபோதனை | 0 | 2 |
| உத்தம வாழ்க்கை | 0 | 2 |
| ஹிந்து தர்மம் | 0 | 2 |

### ரோமேன் ரோலண்டு எழுதிய

| | ரூ. | அ |
|---|---|---|
| மகாத்மா காந்தி (புதிய பதிப்பு | 0 | 4 |

### வில்லியம் தர்ஸ்டன் எழுதிய

| | ரூ. | அ |
|---|---|---|
| இல்லற மகா ரகஸியம் | 0 | 4 |

### பகதூர்ஜீ கமிட்டி அறிக்கையான

| | ரூ. | அ |
|---|---|---|
| இந்தியாவின் கடன் பொறுப்பு | 0 | 4 |

### க. சந்தானம் எழுதிய

| | ரூ. | அ |
|---|---|---|
| சத்திய சமாஜம் | 0 | 4 |

### வ. வே. ஸு. அய்யர் எழுதிய

| | ரூ. | அ |
|---|---|---|
| மங்கையர்க்கரசியின் காதல் கதைகள் | 0 | 8 |

"ஜகன்மோகினி" ஆபீஸ், திருவல்லிக்கேணி சென்னை.

Jaganmohini (Mar. 1934) Regd. No. M. 2210

போலி மருந்துகளைப் பற்றி எச்சரிக்கையாக இருங்கள் !!!

# அமிர்தாஞ்சனம்

நாற்பது வருஷங்களுக்கு மேலாக முன்னணியில் நிற்கின்றது.




மற்றவைகள் இதைப் பின்பற்றித்தான் வருகின்றன.

லக்ஷக் கணக்கில் செலவாகின்றது

எல்லா இடங்களிலும் விற்கப்படும்.

ஏஜண்டு:
ஏ. பி. பாரெக்கு,
சைனா பஜார் ரோட்,
சென்னை.

அமிர்தாஞ்சன்
டிபோ.,
சென்னை கல்கத்தா
பம்பாய்.

PRINTED AT TATA PRESS, & PUBLISHED BY V. M. PARTHASARATHY, MADRAS.